பக்கம்: எட்டு
விலை ரூபா 5.00

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# வலம்புரி
# VALAMPURI

அழகிய தங்க நகைகளை
உங்கள் எண்ணம்போல்
தெரிவுசெய்திட
அர்ச்சனா
ஜுவலர்ஸ்
176/1, நாவலர் வீதி,
118, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி-1481)

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 மாசி 1 செவ்வாய்க்கிழமை (13-02-2001) தொலைபேசி: 3378 ஒலி: 56

★ விடுதலைப் புலிகள் இயக்கத்தை பிரித்தானியா தடை செய்தால்

# அரசு - புலிகள் பேச்சு சுதந்திரமாக
# நடைபெறுவது சாத்தியமில்லை!

## பாலசிங்கம் தமிழ் கார்டியனுக்கு பேட்டி

(லண்டன்)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை பிரித்தானியா அரசு தடை செய்வதானது புலிகள் இயக்கத்தைப் பலவீனமடையச் செய்வதுடன்- நான் தலைமறைவாக வாழவேண்டிய நிலையையும் ஏற்படுத்தும்.

இதனால் நோர்வே அரசுடன் பிரித்தானியாவிலிருந்து கொண்டு சுதந்திரமாகப் பேச்சு நடத்த முடியாது. அவ்வாறு 'சந்தித்துப் பேசினால் அதனை சதிமுயற்சி என்று கூறி பிரித்தானியா பேச்சு வார்த்தையைத் தடைசெய்யவேண்டி ஏற்படும். இதனால் ஏற்படவிருக்கும் பாதகமான விளைவுகள் பற்றி நோர்வேயின் தூதுவர் எரிக்சோல் ஹெய்மிடம் நான் எடுத்துக் கூறியுள்ளேன்-

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் ''தமிழ் கார்டியன்'' னுக்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

அப்பேட்டியில் மேலும்தெரிவித்ததாவது;

இலங்கை இனப் பிரச்சினையை பிரிட்டன் உட்பட ஐரோப்பிய நாடுகள் தான் வெளியுலகத்திற்கு கொண்டு வந்து தமிழ் மக்களுக்கு பிரச்சினை உண்டு என்பதைஎடுத்

→8ஆம் பக்கம் பார்க்க

## ஐரோ. பாராளுமன்றக் குழு 18ந்திகதி கொழும்பு வரும்

(கொழும்பு)

ஐரோப்பிய யூனியன் பாராளுமன்றஉறுப்பினர்கள் பத்துப் பேர் எதிர்வரும் 18ம் திகதி கொழும்பு வரவுள்ளனர்.

கொழும்புவரவுள்ள10பேர் கொண்ட இக்குழுவினர் ஏழு நாட்கள்இங்கு தங்கி யிருப்பதுடன் வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்குச் சென்று அங்கு நடைபெற்றுவரும் புனர்நிர்மாணப் பணிகளைப் பார்வையிடவுள்ளனர்.

இத்தூதுக்குழுவினர்யாழ்ப்பாணத்துக்கும் விஜயம் செய்து இங்குநடைபெற்று வரும் புனர்வாழ்வுப் பணிகளையும் பார்வையிடவுள்ளனர்.

## பொலிஸ் பாவனையிலுள்ள வீடுகளின் விபரங்களை அனுப்பிவைக்கக்கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். குடா நாட்டில் பொலிஸாரின் பயன்பாட்டுக்கு உட்பட்டுள்ள வீடுகளுக்கு வாடகை வழங்குவதற்குரிய ஏற்பாடுகளை காங்கேசன் துறையிலுள்ள பொலிஸ் தலைமையகம் மேற்கொண்டுள்ளது.

இதன் அடிப்படையில் சம்பந்தப்பட்ட வீட்டு உரிமையாளர்கள் தற்போது தங்கியுள்ள வீட்டு முகவரி, காணி

→8ஆம் பக்கம் பார்க்க

## புலிகளை தடைசெய்ய வேண்டாம்

# பத்து தமிழ் கட்சிகளும் இன்று பிரித். தூதுவருடன் அவசர சந்திப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தமிழ் கார்டியன் பத்திரிகைக்கு அளித்த பேட்டியை அடுத்து அவசர அவசரமாக பத்துத் தமிழ்க் கட்சிகளும் இன்று காலை பிரித்தானியத் தூதுவர் லிண்டா டபீல்டை சந்தித்துப் பேசவிருப்பதாக அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் பொதுச்செயலாளர் வலம்புரிக்கு நேற்றிரவு தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தை தடை செய்யக்

→ 8ஆம் பக்கம் பார்க்க

## திருக்கேதீஸ்வரம் பற்றிய அனுருத்தவின் கூற்றுக்கு ஆலய நிர்வாகம் கண்டனம்

(கொழும்பு)

திருக்கேதீஸ்வர ஆலய சுற்றாடலில் இருந்து சுமார் 200 மீற்றருக்கு அப்பால்தான் இராணுவம் நிலைகொண்டிருப்பதாகவும், ஆலய சுற்றாடலில் இராணுவம் இல்லை என்றும் பிரதிபபாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த கூறியிருப்பதை ஆலய நிர்வாகம்

→ 8ஆம் பக்கம பார்க்க

## யாழ். நகரை அதிரவைத்த பல்குழல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யுத்த மேகம் கலைந்து அமைதியான சூழ்நிலை காணப்பட்ட யாழ் நகரப் பகுதியில் திடீரென நேற்று நண்பகல் இடம்பெற்ற எறிகணை மற்றும் பல் குழல் பீரங்கித் தாக்குதல்களினால் சில நிமிட நேரம் அதிர்ந்த வண்ணமிருந்தது.

இராணுவத்தினரின் இத் திடீர்த் தாக்குதல் மக்கள் மத்தியில் பயப்பீதியை ஏற்படுத்தியிருந்ததுடன், யாழ். போதனா வைத்திய சாலையில் உள்ள நோயாளர்களும் பெரும் தாக்கத்திற்குள்ளானார்கள்.

இராணுவ முகாமில்இருந்து ஏவப்பட்ட எறிகணை, பல்குழல் பீரங்கித் தாக்குதல்கள் கடற்கரைப் பிரதேசங்களை அண்டிய பகுதிகளில் விழுந்து வெடித்தன. (ம-12)

# புலிகளைத் தடைசெய்யாவிட்டால் பிரித்தானியா மீது சட்டநடவடிக்கை

## சிஹல உறுமய கட்சி எச்சரிக்கிறது

(கொழும்பு)

தமிழீழவிடுதலைப் புலிகள் அமைப்பை பயங்கரவாத அமைப்பெனக் கருதிபிரித்தானியஅரசாங்கம் தடைசெய்யவேண்டும்இல்லையேல் பிரித்தானியஅரசுமீது சிஹல உறுமயக் கட்சி சட்டநடவடிக்கை எடுக்கும்.

இவ்வாறு சிஹலஉறுமயச் செயலாளரும் பராளுமன்ற உறுப்பினருமான திலக் கருணாரட்ண பிரித்தானிய அரசுக்கு எச்சரிக்கைவிடுத்துள்ளார்.

இதுவரைகாலமும் இடம்பெற்ற விடுதலைப்புலிகளின் பயங்கரவாதச் செயற்பாடுகள் அவர்களைத் தடைசெய்வதற்குப் போதிய

→ 8ஆம் பக்கம் பார்க்க

## சிற்றி ஒவ் றிங்கோ இன்று புறப்படும்

(யாழ்ப்பாணம்)

''சிற்றி ஒவ் றிங்கோ'' பயணிகள் கப்பல் 400 பயணிகளுடன் இன்று காங்கேசன் துறையிலிருந்து திருமலைக்கு புறப்படும்.

இக் கப்பலில் பயணம்செய்வதற்கு பயண அனுமதி மற்றும் பயணச்சீட்டுக்களைப் பெற்றவர்கள் இன்று காலை 7.00 மணிக்கு பயண ஆயத்தங்களுடன் யாழ். ஸ்ரான்லி வீதியிலுள்ள மணியம் கட்டிடத்தில் இயங்கும் ரான் அலுவலகத்துக்கு வருமாறு ரான் அதிகாரி எஸ். குகராஜன் தெரிவித்துள்ளார்.

இதே வேளை ''சிற்றி ஒவ் றிங்கோ'' பயணிகள் கப்பல் 330 பயணிகளுடன் நேற்று திருமலையிலிருந்து யாழ் நோக்கி புறப்பட்டுள்ளதாக திருமலைச் செய்திகள் தெரிவிக்கின்றன. (இ)

# புலிகளை பிரிட்டன் தடை செய்தால் இலங்கையில் யுத்தம் நீடிக்கும்!

## சந்திரசேகரன் எம்.பி தூதருக்கு கடிதம்

(கொழும்பு)

பிரித்தானியா விடுதலைப் புலிகளைத் தடை செய்ய வேண்டுமென இன்று விடப்படும் கோரிக்கைகள் இலங்கையில் யுத்தத்தை நீடிக்க செய்து பல்லாயிரக் கணக்கான உயிர்கள் தொடர்ந்தும் பலியாவதற்கு காரணமாவதோடு, இனப்பிரச்சினையை மேலும் சிக்கலாக்கி விடும். இவ்வாறு மலையக மக்கள் முன்னணித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பின

→8ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

இம் மாதம் 12 - ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி, வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப் பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாகத் தரப்படுகின்றன.

| | |
|---|---|
| 180698 சி | 180716 ஏ |
| 180718 ஏ | 180727 ஏ |
| 180727 பி | 180748 ஏ |
| 180748 பி | 180761 ஏ |
| 180775 ஏ | 180807 ஏ |
| 180833 ஏ | 180833 பி |
| 180883 ஏ | 180883 பி |

**சங்கானை**

| | |
|---|---|
| 71156 ஏ | |

**சாவகச்சேரி**

| | |
|---|---|
| 171189 ஏ | 158309 ஏ |
| 164494 ஏ | 164544 ஏ |
| 177622 ஏ | 177622 பி |
| 177623 ஏ | 177623 பி |

**யாழ்ப்பாணம்**

| | |
|---|---|
| 171148 ஏ | 171166 ஏ |
| 171174 ஏ | 171180 ஏ |
| 171181 ஏ | |

**கரவெட்டி**

| | |
|---|---|
| 171151 ஏ | 171152 ஏ |
| 146070 ஏ | 146645 ஏ |
| 146645 பி | 148424 ஏ |
| 148424 பி | 158991 ஏ |
| 158091 ஏ | 158091 சி |
| 158091 டி | 164744 ஏ |
| 164744 பி | 164744 சி |
| 164744 டி | 164825 ஏ |
| 165181 ஏ | 165181 பி |
| 165181 சி | 165181 டி |
| 165181 ஈ | 165384 ஏ |
| 165384 பி | 165396 ஏ |
| 165396 பி | 165396 சி |
| 165396 டி | 165396 ஈ |
| 169593 ஏ | 169593 பி |
| 169593 சி | 169718 ஏ |
| 174420 ஏ | 164422 ஏ |
| 174422 பி | 174441 ஏ |
| 174605 ஏ | 174605 பி |
| 176062 ஏ | 176069 ஏ |
| 176121 ஏ | 176121 சி |
| 176229 ஏ | 176263 ஏ |
| 176263 பி | 176263 சி |
| 176263 டி | 176295 ஏ |
| 176295 பி | 179295 சி |
| 176342 பி | 176373 ஏ |
| 176392 ஏ | 176392 பி |
| 176467 ஏ | 176467 பி |
| 176467 சி | 176493 ஏ |
| 176493 சி | 177535 ஏ |
| 177535 பி | 177576 ஏ |
| 177584 ஏ | 177584 பி |
| 177584 சி | 177594 டி |
| 177584 ஈ | 177584 எவ் |
| 177645 ஏ | 177645 பி |
| 177645 சி | 177645 டி |
| 177645 ஈ | 177645 எவ் |
| 177676 ஏ | 177676 பி |
| 177708 ஏ | 177708 பி |
| 177708 சி | 177708 டி |
| 177708 ஈ | 177719 ஏ |
| 177720 ஏ | 177728 ஏ |
| 177741 ஏ | 177741 பி |
| 177741 சி | 177785 ஏ |
| 177828 ஏ | |

**கோப்பாய்**

| | |
|---|---|
| 153113 ஏ | 163799 ஏ |
| 163799 பி | 163799 சி |
| 170445 ஏ | 170445 பி |
| 170503 ஏ | 170503 பி |
| 170531 ஏ | 170531 சி |
| 170531 டி | 170572 ஏ |
| 171170 ஏ | 171179 ஏ |
| 173247 ஏ | 7 13267 ஏ |
| 173267 பி | 173283 ஏ |
| 173328 ஏ | 173328 பி |
| 173328 சி | 173328 டி |
| 173346 ஏ | 173346 பி |
| 173346 சி | 173346 டி |
| 173346 ஈ | 173346 எவ் |
| 173375 ஏ | 173375 பி |
| 173397 ஏ | 173397 பி |
| 177344 ஏ | 177358 ஏ |
| 177358 பி | 177409 ஏ |
| 177409 பி | 177421 ஏ |
| 177421 பி | 177421 சி |
| 177421 டி | 177421 ஈ |
| 177467 ஏ | 177467 பி |
| 177467 சி | 177605 ஏ |
| 177505 பி | 177506 ஏ |
| | 177506 பி |
| 177507 ஏ | 177507 பி |
| 179522 ஏ | 179522 பி |
| 179522 சி | 179522 டி |
| 179522 ஈ | 179554 ஏ |
| 179655 ஏ | 179681 ஏ |
| 179683 ஏ | 179865 ஏ |
| 179865 பி | 179865 சி |
| 179865 டி | 180644 ஏ |
| | 180644 பி |
| 180655 ஏ | 180655 பி |
| 180665 ஏ | 180665 பி |
| 180698 ஏ | 180698 பி |

**நல்லூர்**

| | |
|---|---|
| 162829 ஏ | 162829 பி |
| 162829 சி | 170676 ஏ |
| 170723 ஏ | 171133 ஏ |
| 171134 ஏ | 171135 ஏ |
| 171136 ஏ | 171138 ஏ |
| 171139 ஏ | 171140 ஏ |
| 171141 ஏ | 171142 ஏ |
| 171143 ஏ | 171145 ஏ |
| 171146 ஏ | 171147 ஏ |
| 171149 ஏ | 171150 ஏ |
| 171153 ஏ | 171155 ஏ |
| 171157 ஏ | 171158 ஏ |
| 171159 ஏ | 171160 ஏ |
| 171161 ஏ | 171162 ஏ |
| 171164 ஏ | 171167 ஏ |
| 171168 ஏ | 171169 ஏ |
| 171172 ஏ | 171173 ஏ |
| 171173 பி | 171173 சி |
| 171176 ஏ | 171177 ஏ |
| 171178 ஏ | 171182 ஏ |
| 171197 ஏ | 171300 ஏ |
| 171588 ஏ | 171589 ஏ |
| 171590 ஏ | 171592 ஏ |
| 171598 ஏ | 174176 ஏ |
| 174176 பி | |
| 174176 சி | 177154 ஏ |
| 177169 ஏ | 177171 ஏ |
| 177171 பி | 177172 ஏ |
| 177173 ஏ | |
| 177173 பி | 177173 சி |
| 177176 ஏ | 177182 ஏ |
| 177185 ஏ | 177189 ஏ |
| 177190 ஏ | 179619 ஏ |
| 179619 பி | 179619 சி |
| 179619 டி | 179631 ஏ |
| 179631 பி | 179631 சி |
| 179647 ஏ | 179647 பி |
| 179649 ஏ | 179654 ஏ |
| 179654 பி | |

**பருத்தித்துறை**

| | |
|---|---|
| 143636 ஏ | 143636 பி |
| 143636 சி | 161992 ஏ |
| 164471 ஏ | 164750 ஏ |
| 164782 ஏ | 165013 ஏ |
| 169666 ஏ | 169666 பி |
| 169666 சி | 169666 டி |
| 172498 ஏ | 172498 பி |
| 172629 ஏ | 176201 ஏ |
| 176207 ஏ | 176207 பி |
| 176374 ஏ | 176374 பி |
| 176374 சி | 176509 ஏ |
| 176510 ஏ | 177240 ஏ |
| 177543 ஏ | 177543 பி |
| 177626 ஏ | 177626 பி |
| 177662 ஏ | 177688 ஏ |
| 177694 ஏ | 177696 ஏ |
| 177696 பி | 177731 ஏ |

**உடுவில்**

| | |
|---|---|
| 171137 ஏ | 171163 ஏ |
| 171165 ஏ | 171199 ஏ |
| 177203 ஏ | 177255 ஏ |
| 177297 ஏ | 177297 பி |
| 179577 ஏ | 179577 பி |
| 179589 ஏ | 179595 ஏ |
| 179595 பி | 179610 ஏ |
| 179610 பி | 179629 ஏ |
| 179629 பி | 179636 ஏ |
| 179636 பி | 179636 சி |
| 179656 ஏ | 179656 பி |
| 179674 ஏ | 179678 ஏ |
| 179688 ஏ | 179688 பி |

# அடையாள அட்டைகளை பெறுக

(மந்திகை)

நுணாவில்கிழக்கு அமிர்தாம்பிகைவித்தியாலய மாணவன் வடிவேலுசெல்வநேசன், கரம்பைக்குறிச்சி வரணி மேற்கைச்சேர்ந்த யோகேந்திரன்பராசக்தி ஆகியோருடைய விசேட அடையாள அட்டைகள் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

உரியவர்களை நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் பெற்றுக் கொள்ளுமாறு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தகம்பத் தெரிவித்துள்ளார். (உ-23)

### புலிகளுக்கு தி.மு.க ஆதரவளிக்கிறது

## 'துக்ளக்' சோவின் பேட்டிக்கு

# கலைஞர் மு. கருணாநிதி பதிலடி



தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களான திராவிட முன்னேற்ற கழகத்தினர் முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்டதன் பின்பும் தமது ஆதரவை புலிகளுக்கு வழங்கி வருகின்றனரென ''துக்ளக்'' பத்திரிகையின் ஆசிரியர் சோ ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய பேட்டியில் கூறியது அவதூறான கருத்தாகும்.

இவ்வாறு தி.மு.க தலைவரும் தமிழக முதலமைச்சருமான மு. கருணாநிதி வெளியிட்ட அறிக்கை ஒன்றில் குற்றம் சாட்டியுள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தீவிரவாதத்தை நான் ஆதரிப்பதாகவும் ராஜீவ் காந்தியை விடுதலைப்புலிகள் கொலை செய்த பின்பும் விடுதலைப்புலிகளுக்கு நான் ஆதரவு வழங்குவதாகவும் இப்போதும் அதே நிலையில் தான் நான் இருப்பதாகவும் நண்பர் சோ வழங்கிய பேட்டியில் குறிப்பிட்டுள்ளார். இதனாலேயே தான் திராவிட முன்னேற்ற கழக ஆட்சியை தான் எதிர்ப்பதாகவும் அவர் கூறியிருக்கிறார்.

பத்மநாபா கொலை செய்யப்பட்டு இரண்டு மாதங்களின் பின் 4.10.1990, 29.4.1991 ஆகிய தினங்களில் ஆங்கிலப் பத்திரிகைக்கு முன்னாள் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா வழங்கிய பேட்டியில் இரண்டு மாதங்களாகவிடுதலைப்புலிகளால்எந்தவிதமானவன்முறையும் இல்லை அதனால் அவர்களை ஆதரிப்பதில்தவறில்லை அதேவேளை இந்திராகாந்தி பாகிஸ்தானில் ஒரு பங்களாதேஷை உருவாக்கியது போல் இந்தியஅரசு இலங்கை மீது படையெடுத்து இலங்கையில் தமிழீழத்தை உருவாக்க வேண்டும்.

பிரபாகரனுக்கு ஈழத்தில் ஒரு ஆபத்தென்றால் தமிழ்நாடு எரிமலையாகும். என்றும், விடுதலைப்புலிகளுக்கு எம்.ஜி.ஆர் உதவி செய்ததில் அணுவளவுகூட கருணாநிதி உதவிசெய்யவில்லையென்றும் தமிழ்நாட்டுமக்கள் விடுதலைப்புலிகளை ஆதரிக்க வேண்டுமென்றும் ஜெயலலிதாதெரிவித்திருந்தார். அவ்வாறுதெரிவித்த ஜெயலலிதாவை வாரிக்கட்டிகொண்டு ஆதரிக்கின்ற சோ, என்னைப் பற்றி அவதூறு பேசுவது வேடிக்கையாக இருக்கிறது. எனகருணாநிதி வெளியிட்ட அவ் அறிக்கையில் மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

### கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில்

# கடந்த மாதம் மட்டும் 1450 பேர் மலேரியாவுக்கு சிகிச்சை பெற்றனர்

(கொழும்பு)

கிளிநொச்சிமாவட்ட வைத்தியசாலையில் கடந்த மாதம் 26 பேர் இரத்தசோகை மற்றும் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் இதன் காரணமாக அங்கு 10 பேர் உயிரிழந்துள்ளதாகவும் மருத்துவமனை வைத்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த மாதத்தில் வெளிநோயாளர் சிகிச்சைப்பிரிவில் 14 ஆயிரத்து 894 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர். இவர்களில் 1450 பேர் மலேரியாவினாலும், 43 பேர் விசர் நாய்க் கடியினாலும், 485 பேர் உயர் குருதி அழுத்தத்தினாலும் பதிக்கப்பட்டுசிகிச்சை பெற்றுள்ளதாக வைத்திய சாலைப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

இதே வேளை இவ்வைத்திய சாலை இடம் பெயர்ந்து மருந்துகள் மற்றும் உபகரணங்கள் பற்றாக் குறையுடன் அக்கராயன் மருத்துவ மனையில் இயங்குவது தெரிந்ததே. [இ]

### அகில இலங்கையில்

## முதலாமிடம்

[யாழ்ப்பாணம்]

இளைஞர்விவகார அமைச்சினால் அகிலஇலங்கை ரீதியில் நடத்தப்பட்ட கவிதைப் போட்டியில் சோமஆரியசிங்கம் செந்தூரன் முதலாம் இடத்தைப்பெற்றுள்ளார்.

பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி உயர்தரவகுப்பு மாணவரான இவர்கல்லூரியின் மாணவத் தலைவனாகவும் தமிழ்மன்றத் தலைவனாகவும் கல்லூரியின் போக்குவரத்துப்பிரிவு பொறுப்பாளராகவும் உள்ளார். இவர் கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த யாழ்ப்பாணம் சிங்கம்ஸ் பார்மசி உரிமையாளர் திருமதி பொ.சோம ஆரியசிங்கத்தின் புத்திரராவார். (வ)

**பாட்டாளி. . .**

மகாநாட்டில் தமிழ் ஈழம் அமைப்பதுவே இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கான ஒரே தீர்வு என்று டாக்டர் ராமதாஸ் முழங்கியிருந்தார். ராஜீவின் கொலையை தொடர்ந்து புலிகளுக்கெதிரான அலைஉச்சக்கட்டத்தில் வீசிய காலத்திலும் சரி, கருணாநிதி முதலமைச்சராகிய காலத்தில் தன்னை புலிகளுடனான தொடர்புகளிலிருந்து விடுவிப்பதற்காக தூரவிலகும்தந்திரோபாயங்களை கையாண்ட காலத்திலும் சரி பா.ம. கட்சியும் அதன் தலைவர் ராமதாசும் தமிழீழக் கொள்கையிலிருந்து பின்வாங்கியதேயில்லை. இந் நிலையில் ராஜீவ் கொலையில்சம்பந்தப்பட்ட புலிகளுடன் தொடர்புடைய எக் கட்சியுடனும் தொடர்பு வைக்கப் போவதில்லை என்று சூழுரைத்து வந்த காங்கிரஸ் இன்று பா.ம. கட்சியுடன் அணி சேர்ந்துள்ளதால்இச்செயல்தவிர்க்க முடியாதது என ஏற்று கொள்ள வேண்டும்.

# யாழ். தே. க. கல்லூரியில் புதிய கற்கைநெறி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியற்கல்லூரியில் இவ்வாண்டு முதல் ''நூலகவிஞ்ஞானமும் தகவல் தொழில்நுட்பமும்'' எனும் கற்கை நெறி ஆரம்பமாகவுள்ளது. இக் கற்கை நெறிக்கு அனுமதி பெற்ற மாணவர்களின் பெயர் விபரம் வருமாறு.

செல்வி எவ் பத்மினி சித்தன்கேணி, செல்வி கே. கோனானந்தேவி இணுவில், செல்வி.சியாமளா சங்குவேலி செல்வி. என். மங்களேஸ்வரி வாழைச்சேனை, செல்வி வி. ரனித்தா வவுனியா, செல்வி. வை ஜயந்தி மிருசுவில், செல்வி ரி அனுசியா சங்குவேலி, ரி. பிரபாஜினி இருபாலை மேற்படி மாணவர்கள் எதிர்வரும் 16 02.2001 வெள்ளிக்கிழமை காலை 8 30 மணிக்கு தமது பெற்றோர்களுடன் கோப்பாயில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு சமுகந்தருமாறு கல்லூரியின் பீடாதிபதி கலாநிதி.திருநாவுக்கரசு கமலநாதன் கேட்டுள்ளார். [ந]

# உதவி வைத்தியர்களின் போராட்டம் தொடர்கிறது

## மருத்துவ சேவை ஸ்தம்பிதம்

வடக்குக் கிழக்கு மாகாணத்திலுள்ள பதிவு செய்யப்பட்ட மற்றும் உதவிவைத்திய அதிகாரிகள் இடர் காலக் கொடுப்பனவைக் கோரி மேற்கொண்டு வரும் வேலை நிறுத்தப் போராட்டத்தினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் மருத்துவப்பணிகள் முற்றாக ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளுக்கு தினமும் சென்று நடமாடும் வைத்திய சேவையை நடத்தி வரும் உதவி வைத்திய அதிகாரிகள் வேலை நிறுத்தத்தில் குதித்துள்ளதால், அந்தப்பகுதி வாசிகள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இதன் காரணமாக மகிளூர் கொக்கட்டிச்சோலை உட்பட பல இடங்களில் இருந்தும் பெருமளவு நோயாளிகள் களுவாஞ்சிக்குடி மாவட்ட வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சை பெற்று வருவதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (ந-4)

# காட்டுப்புலம் பாடசாலையில் ஊட்டச் சத்து உணவு வழங்கும் திட்டம்

## சத்தியசாயி சேவா அமைப்பு மனிதாபிமான உதவி

[யாழ்ப்பாணம்]

காட்டுப்புலம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் வடபிராந்திய சத்திய சாயி சேவா அமைப்பினரால் சத்துணவு வழங்கும் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பாடசாலையில் 125 மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர்.

இவர்களில் சிலர்பசிமற்றும் ஊட்டச்சத்து குறைபாட்டால் பாடசாலை நேரத்தில் மயங்கி விழும் சம்பவங்கள் அதிகரித்தன.

இது குறித்து சத்திய சாயி சேவா அமைப்பினர்க்குத் தகவல் தெரிவிக்கப்பட்டதற்கிணங்க அவர்கள் மேற்கொண்ட பரிசோதனைகளின் மூலம் மேற்படி மாணவர்களில் பலர் வறுமை காரணமாக ஊட்டச்சத்து குறைபாடுடையவர்களாய் விளங்குவது கண்டறியப்பட்டது.

இந் நிலையினைப் போக்கி மாணவர்க்குப் புத்துணர்வூட்டும் மனிதாபிமான சேவையாக ஒவ்வொரு நாளும் சகல மாணவர்க்கும் ஒரு பணிஸ் வழங்குவதெனவும் மாதத்தில் ஒரு தடவை இலைக் கஞ்சி வழங்குவதெனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, மாதத்தில் ஒரு தடவை பரிசோதனை முகாம் அமைக்கப்பட்டு உடல் நலம் ஆராயப்படும் எனவும் மார்ச் மாதம் 23 ஆம் திகதி இது நடைமுறைக்கு வரும் எனவும் தெரியவந்துள்ளது.

(உ-7-12)

## நால்வர் பலி

[மட்டக்களப்பு]

மட்டு பட்டிப்பளை பிரதேச செயலக பிரிவிலுள்ள காஞ்சிரங்குடா வாவியில் படகு கவிழ்ந்ததில் அதில் பயணம் செய்த நால்வர் பலியாகினர்.

இராணுவக் கட்டுப்பாடற்ற படுவான்கரைப் பகுதியில் நிகழ்ந்த இச் சம்பவத்தில், படகோட்டிச் சென்ற இளைஞர் உட்பட பயணம் செய்த அனைவரும் பலியாகியிருப்பது குறிப்பிடத்தக்கது.

[உ-8]

## ஊனமுற்றோர்க்கு உதவிக்கரம் நீட்டும் சமூக சேவைகள் பகுதி

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரதேச செயலக சமூக சேவைகள்பகுதியினரிடம்தொடர்பு கொண்டு, ஊனமுற்றோர்க்கென அரசினால் வழங்கப்படும் சலுகை சேவைகளை சம்பந்தப்பட்டோர் பெற்றுக் கொள்ள முடியுமென சமூக சேவைகள் உத்தியோகத்தர் கே.வி. சிவநேசன் தெரிவித்துள்ளார்.

இந்தவகையில் கடந்த வாரம் 6 பேருக்கு மூக்குக் கண்ணாடிகளும் மூவருக்கு முச்சக்கர வண்டிகளும் வழங்கப்பட்டுள்ளன

இதேவேளை, ஊனமுற்றோர் தினத்தையொட்டி அண்மையில் பாடசாலைகளில் கவிதை, கட்டுரைப்போட்டிகள் நடத்தப்பட்டு பரிசில்களும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது

(உ-12,7)

## தொழில் நுட்ப கல்லூரி மாணவனைகாணவில்லை

[யாழ்ப்பாணம்]

தொழில் நுட்பக் கல்லூரி மாணவன் ஒருவனை இம் மாதம் 5 ஆம் திகதி முதல் காணவில்லையென மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கச்சாய் வீதி, கொடிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்து கரவெட்டியில் வசித்து வந்த இரத்தினம் பிரதீபன் (வயது 22) என்பவரையே காணவில்லை என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 5 ஆம் திகதியன்று தொழில் நுட்பக் கல்லூரிக்கு செல்வதாக கூறிச் சென்றவர் இற்றைவரை வீடு திரும்பவில்லை என முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[உ-12]

## பிரதேச மட்டத்தில் கிராம அபிவிருத்தி சங்கங்களின் சமாசம்

(மானிப்பாய்)

வடக்கு-கிழக்கு மாகாணத்திலுள்ள ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவிலும் இயங்கும் கிராம அபிவிருத்திச் சங்கங்களை ஒன்றிணைத்து பிரதேச மட்ட கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசம் ஒன்று நிறுவப்படவுள்ளது.

இதன் முதற்படியாக எதிர் வரும் மார்ச் 3ஆம் திகதிக்கு முன்பு மேற்படி சங்கங்களை அழைத்து சமாசம் ஒன்றை அமைத்து பதிவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வடக்கு-கிழக்கு மாகாண கிராமிய அபிவிருத்தித் திணைக்களம்சகலகிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களையும் பணித்துள்ளது.

பிரதேச மட்டத்தில் சமாசம் அமைக்கப்பட்டதும் மாவட்ட மட்டத்தில் ஒன்றியம் ஒன்றும் பின்னர்மாகாண மட்டத்தில் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சம்மேளனம் ஒன்றும் அமைக்கப்படுமென மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது

(உ-120)

## 50 லட்சம் பணத்திற்காக வியாபாரிமகன் கடத்தல்

(கொழும்பு)

ஐம்பது இலட்சம் ரூபா பணத்திற்காக இரத்தினக்கல் வியாபாரியின் மகனை வெள்ளை வான் கோஷ்டி ஒன்று கடத்திச் சென்றுள்ள சம்பவம் திக்வெல்லப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

கடந்த வியாழக்கிழமை நள்ளிரவு வேளை மேற்படி வியாபாரியின் வீட்டிற்குள் புகுந்த கோஷ்டி, வீட்டாரைப் பயமுறுத்தி விட்டு வியாபாரியின் மகனைக் கடத்திச் சென்றுள்ளனர்.

கடத்தல் கோஷ்டி பணத்தை எங்கு? எப்படி? தமக்குத் தரவேண்டும் என்று கூறவில்லை.

ஆனால் இச்சம்பவம் பற்றி பொலிஸாருக்கு எதுவித தகவலும் கொடுக்கக் கூடாது என வீட்டாரை மிரட்டிச் சென்றுள்ளனர்.

(செ)

## வன்னிப் பகுதியிலும் குடிசனக் கணக்கெடுப்பு

(கொழும்பு)

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியிலும் செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் குடிசனத் தொகை மதிப்பீடு நடைபெறவுள்ளது.

இலங்கை முழுவதும் குடிசனத் தொகைமதிப்பீடு நடைபெறவுள்ளது

இதற்கு முன்னோடியாக கிராம சேவையாளர்களூடாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன், மேலதிக ஆட்கள் தற்காலிகமாக நியமிக்கப்படவுள்ளார்கள்.

1981 ஆம்ஆண்டிற்குப் பின்னர் மேற்கொள்ளப்படும் குடிசனக்கணக்கெடுப்பு இதுவாகும்.

(செ)

## மகேஸ்வரன் எம். பி. உறுதி

[கொழும்பு]

வெளி நாடுகளில் வாழும் யாழ்ப்பணம் மற்றும் இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதி பொதுமக்கள் தமது சொந்த இடங்களுக்கு செல்வதில் ஏற்படும் இடர்களைய ஏற்ற நடவடிக்கை எடுப்பதென ஐக்கிய தேசியக் கட்சி யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தி. மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மேற்படி மக்கள் தமது சொந்த இடங்கள் செல்வதில் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெறுவதில் பெருத்த சிரமங்களை அனுபவித்து வருவது தெரிந்ததே.

[உ]

## பிரேத வண்டில் கொள்வனவு

(ஊர்காவற்றுறை)

வேலணைப் பிரதேச சபையினால் வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அதிகாரசபையின் உதவியுடன் தகரக் கொட்டகை, இரும்புக்கதிரைகள் கொள்வனவு செய்யப்படவுள்ளதாகவேலணைப் பிரதேச சபைத் தலைவர் என். கருணாகரகுருமூர்த்தி தெரிவித்தார்.

இப் பொருட்கள் கொள்வனவுக்காக ஒருலட்சத்து 40 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் மேலும் பிரேதவண்டில் ஒன்று75 ஆயிரம்ரூபாசெலவில்கொள்வனவு செய்யப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

(உ-75)

## இராசி பலன்

13-02-2001
(மாசி 01, செவ்வாய்)
சஷ்டி பி இ 3 15 வரை
சித்திரை பி.ப 3.16 வரை
இராகுகாலம் 3.34- 5.04 வரை
சுபநேரம் 11.04- 12.34 வரை
சித்தம்.

**மேடம்**
வாகன வசதி, போசன சுகம், தனவரவு, கௌரவம்.

**இடபம்**
சத்துரு ஜெயம், புதிய சிந்தனை, சந்தோசம், வியாதி குணமடையும்.

**மிதுனம்**
தாழ்வு நிலை, வியாதி, அமைதிக் குறைவு, முயற்சி தாமதம்.

**கடகம்**
தன்னம்பிக்கைக் குறைவு, பயந்த சுபாவம், துக்கம், காரிய தாமதம்.

**சிங்கம்**
பிரயாணம், காரியம்நிறைவேறும், தனவரவு, வாக்கு மேன்மை.

**கன்னி**
பொருள் விரயம், காரிய அனுகூலம், வாக்குப்பகை, கௌரவக் குறைவு.

**துலாம்**
கற்பனை மிகுதி, ஜனவசியம், சயன சுகம், காரிய மந்தம்.

**விருச்சிகம்**
தனவிரயம், பிரயாணம், முயற்சி தாமதம், சயன சுகக் குறைவு.

**தனுசு**
முயற்சி கைகூடும், குடும்ப சுகம், நண்பர்கள் சந்திப்பு, கௌரவம்.

**மகரம்**
தொழில் மேன்மை, காரிய வெற்றி, தலைமை வகித்தல் எதிர்பாராத நன்மை.

**கும்பம்**
பிரயாணம், வியாதி, அபகீர்த்தி, கட்டுப்பாடு.

**மீனம்**
எதிர்பாராத பிரச்சினை, அமைதிக் குறைவு, காரியத் தடங்கல், வியாதி.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வளவன்

## வடக்கு-கிழக்கு உதவி மருத்துவர்களின் கோரிக்கை நியாயமற்றது

(கொழும்பு)

வடக்கு -கிழக்கு உதவி மற்றும் பதிவு செய்யப்பட்ட மருத்துவர்களின் கோரிக்கை நியாயமற்றது, அதனை ஏற்றுக்கொள்ள முடியாது.

இவ்வாறு சுகாதார அமைச்சர் டபிளயூ கே. செனவிரட்ண தெரிவித்துள்ளார்.

அரசாங்க மருத்துவ அதிகாரிகளுக்கு வழங்கப்படும் விசேட இடர்காலக் கொடுப்பனவு தமக்கும் வழங்கப்பட வேண்டும் எனக்கோரி, கடந்த 5 ஆம் திகதி முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, தமதுகோரிக்கைக்கு அரசாங்கம் சாதகமான பதில் தரும்வரை வேலைநிறுத்தம் தொடரும் என இவர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் உதவி மற்றும் பதிவு வைத்தியர்கள் சங்கத் தூதுக்குழு கடந்த சனிக்கிழமை, கிழக்குப் புனர்வாழ்வு அபிவிருத்தி கிராம அபிவிருத்தி அமைச்சர் திருமதி பேரியல் அஷ்ரபைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியது.

முன்னாள் பதிவு வைத்திய அதிகாரியான திருமதி பேரியல் அஷ்ரப் இவர்களின் கோரிக்கையை அரசின் கவனத்திற்கு கொண்டுவருவதாக உறுதியளித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது

(செ)

## ஸ்ரீ.ல.சு. கட்சி பொன்விழா மார்ச் 2-ம், 3-ம் திகதிகளில்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 50 ஆவது ஆண்டு பொன் விழாக் கொண்டாட்டங்கள் மார்ச் மாதம் 2ம், 3ம் திகதிகளில் கொழும்பில் கோலாகலமாக கொண்டாடுவதற்குரிய ஏற்பாடுகளை கட்சியின் தலைமைப்பீடம் பெரும் எடுப்பில் மேற்கொண்டு வருகிறது.

கொழும்பு ரேஸ் கோர்ஸ் மைதானத்தில் நடைபெறவுள்ள இவ்விழாவுக்குஇந்தியா பாகிஸ்தான் உட்பட 20 நாடுகளிலிருந்து பிரதிநிதிகள் அழைக்கப்பட்டுள்ளனர்.

மக்கள் சக்தி தங்களுக்கு பெருமளவில் உண்டு என்பதை எடுத்துக்காட்டும் முகமாக கட்சியின் பொன்விழாக் கொண்டாட்டத்தை பெரு விழாவாக கொண்டாடுவதில் கட்சி முனைப்புடன் ஈடுபட்டுள்ளது.

(இ)

### செயலாளராக டி.யு குணசேகரா

(கொழும்பு)

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளராக டி.யு. குணசேகரா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் கூடிய செயற்குழுக் கூட்டத்திலேயே இத் தெரிவு இடம் பெற்றுள்ளது.

(வ)

## கிளின்டனால் மன்னிக்கப்பட்ட பெண்மீது மீண்டும்வழக்குவிசாரணை

(வாஷிங்டன்)

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டன் மன்னிப்பு வழங்கிய பெண்மணி ஒருவருக்கு எதிரான வழக்கு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

திருமதி மேரி ரிச் என்றஇப் பெண்மணி பலவகையான மோசடிகளில் ஈடுபட்டிருந்தவர் என்றும், இவருக்கு கிளின்டன் மன்னிப்பு வழங்கியது பிழை என்றும் கூறியே இப் பெண்மணி மீது மீண்டும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இப் பெண் கிளின்டனின் ஜனநாயகக்கட்சிக்கு பெருந்தொகைப் பணத்தை அன்பளிப்புச் செய்து வந்தவராவர்.

அத்துடன் கிளின்டனின் பதவிக்காலம் முடிவடைந்து வெள்ளை மாளிகையை விட்டுச் செல்லும் போது கொண்டு சென்ற பரிசுப் பொருட்களில் ஒரு பகுதி இப் பெண்ணால் வழங்கப்பட்டுள்ளது.

இக்காரணங்களினாலேயே பல வகையான மோசடிகளைப் புரிந்த இப்பெண்ணுக்கு கிளின்டன் மன்னிப்பு வழங்கியிருந்தார்

(செ)

# காணாமற் போனவர் சடலமாக மீட்பு

(மாத்தளை)

கடந்த மாதம் 21 ஆம் திகதி மாத்தளை நகரில் இருந்துகடத்தப்பட்ட வாகன ஓட்டுநர் சிதம்பரம் சிவசேகரம் என்பவர் எப்பாவலைப் பொலிஸாரால் காட்டுப்பகுதியில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலத்தின் அருகில் இருந்த தேசிய அடையாள அட்டை மூலமே இவரை இனங்காணப்பட்டதாக மாத்தளைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைபொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

(உ-4)

# பாலர் பாடசாலை ஆசிரியர்க்கு ஆயிரம் ரூபா ஊக்குவிப்புத் தொகை

(மந்திகை)

வடமராட்சிப் பகுதிகளில் இயங்கி வருகின்ற பாலர் பாடசாலைகளில் சற்பிக்கின்ற ஆசிரியர்களுக்கு மாதாந்தம் ஆயிரம் ரூபா வழங்குவதற்கு யுனி செவ் நிறுவனம் முன் வந்துள்ளது.

வடமராட்சிதெற்கு மேற்கு பிரதேச செயலகத்தில் இயங்கும் ஒன்பது பாலர் பாடசாலைகளிலும் வடமராட்சி வடக்குப் பிரதேச செயலாளர் பிரிவில் இயங்கும் ஏழு பாலர் பாடசாலைகளிலும் கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்கே இக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

கிராமிய மட்டத்தில் சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்தி சங்கங்கள், பிரதேசசபைக் கூட்டுறவுச்சங்கங்களின் கீழ் இம் முன்பள்ளிகள் இயங்குகின்றமையும்,

இவற்றில் சில நிலயங்கள் போதிய வருமானம் இன்மையாலும் நிர்வாக சீர் கேட்டினாலும் இயங்க முடியாத நிலையில் காணப்பட்ட போதும் அவற்றினை மீள இயங்க வைத்து அங்கு கற்பிக்கின்ற ஆசிரியர்க்கும் ஆயிரம் ரூபா ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்க முன் வந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(உ-23)

# ஆலயங்கள் புனரமைப்பு சமாதானத்தின் அறிகுறி

(யாழ்ப்பாணம்)

ஆலயங்கள புனரமைக்கப் படும் நடவடிக்கைகள் நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்படுவதற்கான நல்ல சகுனமாகும்.

இராணுவ நடவடிக்கையால் பாதிக்கப்பட்ட ஆலயங்களை புனரமைத்தால் தான் இந் நாட்டுக்கு ஏற்பட்டுள்ள தோஷம் நீங்கும்.

யாழ்.இந்து சமயப் பேரவைச் செயலாளர் சி.சக்திகிரீவன் சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெற்ற முருகன் புகழ் ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு விழாவில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வீரபத்திரப்பிள்ளை தலைமையில்நடைபெற்றஇவ் விழாவில் சக்திகிரீவன் தொடர்ந்து உரையாற்றுகையில்,

1985 ஆம் ஆண்டும் அதன் பின்பும் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளினால் சந்நிதி முருகன் ஆலயம் மோசமாகப் பாதிப்படைந்துள்ளது. இதனைப் புனரமைக்க உதவுமாறு ஜனாதிபதிக்கு தெரியப்படுத்தியுள்ளோம். இதற்குரிய புனரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதாக ஜனாதிபதி செயலகம் எமக்கு அறிவித்துள்ளது.

உலகில், இந்து சமயம் தொடர்பான எழுச்சியை ஏற்படுத்த வேண்டுமென்பதற்காகவே இந்து சமயப் பேரவை செயற்பட்டு வருகின்றது.

இவ் அமைப்பு இந்த நாட்டில் வாழும் இந்துக்களின் நலனை மட்டும் பேணும் அமைப்பு அல்ல, உலகிலுள்ள இந்து மக்கள் அனைவருக்குமான பொது அமைப்பு என அவர் மேலும் தெரிவித்தார்.

(உ-இ)

# ஆஸ்பத்திரி மருந்து களஞ்சியத்தில் திருட்டு

(கொழும்பு)

கொழும்பு தெற்கு பெரியாஸ்பத்திரியின் மருந்துக் களஞ்சியத்தை உடைத்து இலட்சக் கணக்கான ரூபா பெறுமதியான மருந்துகள் களவாடப்பட்டுள்ளன.

இச்சம்பவம் தொடர்பான சந்தேக நபர்கள் மூவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அத்துடன் தனியார் மருத்துவ நிலையங்களிலும் இவர்கள் திருட்டினை மேற்கொண்டுள்ளதாக விசாரணையின் போது தெரியவந்துள்ளது.

(உ-9)

# இருவர் பலி

[யாழ்ப்பாணம்]

கடந்த 10 ஆம் திகதி சனிக்கிழமை முகமாலை, கிளாலிப் பகுதிகளில் இடம் பெற்ற மோதல் சம்பவங்களில் இரு விடுதலைப்புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்டிருப்பதாக ஊடகத் தகவல் மையம்அறிவித்துள்ளது.

பாதுகாப்பற்ற தூரத்தில் மேற்படி இரு சடலங்களும் காணப்பட்டமையினால் படையினரால் அவற்றை மீட்க முடியவில்லை எனவும் தகவல் மையம் அறிவித்துள்ளது.

(உ)

# சிறந்த பத்திரிகையாளருக்கான நிமலராஜன் விருது நித்தாவூர் சலீமுக்கு

[யாழ்ப்பாணம்]

2001 ஆம் ஆண்டுக்கான சிறந்த பத்திரிகையாளர் விருது கடந்த வருடம் படுகொலை செய்யப்பட்ட பத்திரிகையாளர் அமரர் மயில்வாகனம் நிமலராஜன் நினைவாக வழங்கப்படவுள்ளது.

கிழக்கிலங்கைச் செய்தியாளர் சங்கம் வருடாந்தம் சிறந்த பத்திரிகையாளரைக் கௌரவித்து விருது வழங்கி வருகிறது.

இதற்கமைய அண்மையில் இடம்பெற்ற மேற்படி சங்க கூட்டத்தில் பத்திரிகையாளர் நிமலராஜன் நினைவாக இவ் வருட விருது வழங்குவதென தீர்மானிக்கப்பட்டது

இதேசமயம், செய்தியாளர் நிமலராஜன் விருதினை நடுநிலைச் செய்தியாளரான நித்தாவூர் சலீமுக்கு வழங்குவதென தீர்மானிக்கப்பட்டிருப்பதாய் தெரியவந்துள்ளது.

(உ-6)

# ஓய்வூதியம் பெறும் வயதெல்லை நீடிப்பு

(கொழும்பு)

அரசாங்க சேவையில் உள்ளவர்கள் ஓய்வூதியம் பெறுவதற்கான வயதெல்லையை நீடிப்பதற்கு பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் றிச்சட் பத்திரண தீர்மானித்துள்ளதாகத் தெரிய வருகிறது.

அத்துடன் நடைமுறையில் உள்ள ஓய்வூதியத்தொகையை செலுத்தும முறையிலும் மாற்றம் கொண்டு வரப்பட இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியச் சட்டத்திலும் திருத்தங்கள்மேற்கொள்ளப்படவிருப்பதாக மேலும் தெரியவந்துள்ளது.

இந்தச் சட்டத்தின் மூன்றாவது ''சரத்தை'' மாற்றியமைப்பதற்கான திருத்தச் சட்டம் அண்மையில் அமைச்சரால் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(உ- 9)

# பருத்தித்துறையில் தீவிர சோதனை

(மந்திகை)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையை சுற்றி படையினரால் வீதித் தடைகள் போடப்பட்டு சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மந்திகை பருத்தித்துறை வீதி, மந்திகை வைத்தியசாலை வீதி, பருத்தித்துறை கலிகைச்சந்தி வீதி, பருத்தித்துறை கொடிகாமம்வீதி ஆகிய இடங்களிலேயே கடந்த 11 ஆம் திகதி முதல் சோதனை நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

இதேவேளை, வடமராட்சியின் பல்வேறு பகுதிகளிலும் திடீர்சுற்றிவளைப்பு தேடுதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

(உ-23)

# ஷஷ்டியப்த பூர்த்தி

(இணுவில்)

கொக்குவில நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய சிரேஷ்ட குருவாகிய வேதாகம கிரியா ஜோதி சிவஸ்ரீ ந.சபாரத்தினக் குருக்களின் ஷஷ்டியப்த பூர்த்தி வைபவம் வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மு.ப 9 மணிக்கு மேற்படிஆலய திருக் கல்யாண மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

அன்றைய தினம் ''ஸ்ரீதுர்க்கா சகஸ்ரநாம நூல்'' வெளியீடும் இடம் பெறும்.

(உ-49)

# 30 இலட்சம் செலவில் அரச களஞ்சியம்

(மந்திகை)

பருத்தித்துறை பகுதியில் முப்பது இலட்சம் ரூபா செலவில் அரசகளஞ்சியம் அமைக்கப்பட்டு வருவதாக வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் ஆ சிவசுவாமி தெரிவித்துள்ளார்.

புனர்வாழ்வு அமைச்சினுடைய நிதி மூலம், புலோலி மேற்கு பகுதியில் அமைக்கப் படும் இக்களஞ்சியத்தில் பருத்தித்துறை இறங்கு துறையிலிருந்து இறக்கப்படும் பொருட்களின் ஒரு தொகுதி களஞ்சியப் படுத்தப்பட வுள்ளது.

அதேவேளை வடமராட்சி பிரதேசத்திலுள்ள கரவெட்டி, பருத்தித்துறை, மருதன்கேணி ஆகிய பிரதேச செயலகங்களுக்கானபொருட்கள் இங்கிருந்தே விநியோகிக்கப்படவுள்ளது.

(உ-23)

# துன்னாலையில் குழுமோதல் இருவர் ஆஸ்பத்திரியில்

(மந்திகை)

துன்னாலை வேம்படிப் பகுதியில் இடம் பெற்ற கோஷ்டி மோதல்சம்பவத்தில் காயமடைந்த இருவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பரமேஸ்வரன் இதயராணி (வயது 25) அரசன் அஜந்தன் ஆகிய இருவருமே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த மாதம் மேற்படி பகுதியில் இடம்பெற்ற மிதிவெடிச் சம்பவம் ஒன்றின் பின்னணியில் இருதரப்பினர்கத்திவாள்கள் என்பவற்றுடன் நடமாடி ஒருவரை ஒருவர் பழி தீர்க்கும் படலம் இடம்பெற்று வருவதாகவும் அதன் ஒருபகுதியாகவேஇக்கோஷ்டி மோதல்இடம்பெற்றதாகவும் கூறப்படுகிறது.

இதேசமயம், இச்சம்பவத்தில் தொடர்புடைய இருவரை நெல்லியடி பொலிஸார் கைது செய்து விசாரணைகளுக்குட்படுத்தி வருகின்றனர்.

(உ-23)

# மெய்வல்லுநர் போட்டி

(இணுவில்)

யா/கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி வரும் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்வில் திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் த.தேவராஜன் பிரதம விருந்தினராககலந்துகொள்கிறார்.

(உ-49)

# குற்ற செயல்களை தடுக்க புதிய செயல்த் திட்டம்

(கொழும்பு)

நாடு முழுவதும் இடம் பெற்று வருகின்ற குற்றச் செயல்களை கட்டுப்படுத்துவதற்கு புதிய செயல்திட்டம் ஒன்று ஜனாதிபதியின் பணிப்பின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் எஸ். எஸ். பி. நியன் ஸி பெரேரா தெரிவித்தார்.

மேலும் இத் திட்டமானது நடவடிக்கை செயல் திட்டம், நிர்வாக செயல் திட்டம் என இரு பிரிவாக செயற்படும்.

நடவடிக்கை செயல் திட்டமானது குற்றச் செயல்களுக்கு எதிராக பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளின் கீழ் இயங்கும்.

நிர்வாக செயல்திட்டமானது நடவடிக்கை செயல் திட்டத்தினூடாக குற்றச் செயல்களை அவதானித்து புள்ளி விபரங்களை சேகரித்து அதனூடாகச் செயல்படும்.

இந் நிர்வாக செயல்திட்டத்தில் ஒவ்வொரு பிராந்திய பொலிஸ் நிலையங்களின் தலைமை பொறுப்பதிகாரிகள், உதவிப் பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்குவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ)

# கைதடிப் பிரதேச மக்கள் மீளக் குடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

இம்மாதம் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை, கோப்பாயில் உள்ள 521 வது படைப் பிரிவு நிர்வாக காரியாலயத்திற்குச் சென்று, மீளக்குடியமரச் சம்மதம் தெரிவித்த குடும்பங்கள் அனைத்திற்கும் மீளக்குடியமர ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாய் 52வது இராணுவப் பிரிவினால் யா/மாவட்டச் செயலகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, கைதடி வடக்கு (ஜே/288) கிராம சேவகர் பிரிவு, கைதடிதென் கிழக்கு(ஜே/292)கிராம சேவகர் பிரிவு, கைதடி மேற்கு (ஜே/293)கிராமசேவகர்பிரிவு ஆகியவற்றைச் சேர்ந்த மீளக் குடியமரவிருப்பம் தெரிவித்த குடும்பங்களை நாளை புதன் கிழமை மு.ப. 9.30 மணிக்கும்,

கைதடி கிழக்கு (ஜே/289), கைதடி மத்தி ஜே/290), கைதடி தெற்கு (ஜே/291) ஆகிய கிராமசேவகர் பிரிவுகளைச் சேர்ந்த மீளக் குடியமர விருப்பம் தெரிவித்த குடும்பங்களை 15 ஆம் திகதி வியாழக்கிழமை மு. ப. 9.30 மணிக்கும்,

கோப்பாய்ச் சந்தியில் அமைந்துள்ள 521 படைப் பிரிவு நிர்வாகக் காரியாலயத்திற்கு ஏற்ற ஒழுங்குகளுடன் வருகை தருமாறு 52 வது படைப்பிரிவின் பொறுப் பதிகாரி அறிவித்துள்ளார்.

(உ)

# செயலமர்வு

(மந்துவில்)

தென்மராட்சி கல்விவலயப் பாடசாலைகளில் கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்கான ஆலோசனை வழிகாட்டல் செயலமர்வுகள் பின்வரும் திகதிகளில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது:

17 ஆம் திகதி தரம் 11 ற்கு சுகாதாரமும் உடற்கல்வியும் 6, 7, 9, 10 ஆம் தரங்களுக்கான ஆங்கிலமும் தரம் 2ற்கான மீள்பயிற்சியும்.

18 ஆம்திகதிதரம்11இற்கான சுகாதாரமும் உடற்கல்வியும் மனையியலும் தரம் 2 இற்கான மீள்பயிற்சி செயலமர்வும் நடைபெறும்.

(உ-39)

## இன்று ஒரு தகவல்

# பெரிய மாளிகை எதற்கு?

தேவராஜனான இந்திரன் ஒரு தடவை தேவசிற்பியான விஸ்வகர்மாவைக் கூப்பிட்டு, பதினான்கு உலகங்களிலும், அதைவிடச் சிறந்த மாளிகை கிடையாது என்று சொல்லும்படி, அத்தனை பெரியதும், அத்தனை அழகியதுமான மாளிகை ஒன்றுகட்டவேண்டுமென்று உத்தரவிட்டான். விஸ்வகர்மா தன் உதவியாட்களை வைத்துக் கொண்டு மிகப்பெரிய மாளிகையைக் கட்ட ஆரம்பித்தான்.

மிகப்பெரிய மாளிகையாகவும் இருக்க வேண்டும், அதே சமயம் மிக அழகிய மாளிகையாகவும் இருக்கவேண்டும் என்று இந்திரன் விரும்பியதால் பலதேவ வருஷங்களாகியும், விஸ்வகர்மாவினால் மாளிகையைக் கட்டி முடிக்க முடியவில்லை. ஆதலால் விஸ்வகர்மாவும் அவனுடைய உதவியாட்களும் களைத்துப் போய் விட்டார்கள். இந்திரனுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. என்ன செயலாமென்று அவன் திகைத்திருந்தபோது அங்கே நாரத முனிவர் வந்து சேர்ந்தார்.

நாரதரைக் கண்டதும் அவருக்குத் தன் மாளிகையைக் காட்டவேண்டுமென்று ஆசை உண்டாயிற்று. அதைச் சுற்றிக் காண்பித்து விட்டு, 'நீங்கள் பதினான்கு உலகங்களிலும் சஞ்சாரம் செய்கிறீர்களே இத்தனை பெரிய மாளிகையைஎங்காவதுகண்டதுண்டா?' என்று கேட்டான். அதற்கு நாரதர் 'நான் பார்த்ததில்லை. ஆனால் மகரிஷி லோமசர் சிரஞ்சீவி அவர் பார்த்திருக்கிறாரோ என்னவோ' என்றார் அந்தச் சமயத்தில் லோமசரும் அங்கு வந்து சேர்ந்தார். அவருக்கு உடம்பெல்லாம் ரோமங்கள் இருந்ததனால் லோமசர் என்று பெயர். இடுப்பில் கௌபீனம், தலையில் சின்னப்பாய் அவ்வளவுதான் அவருடைய ஆஸ்தி.

இந்திரன் அவரைப்பார்த்து 'எதற்காகப் பாயைத் தலைமேல் விரித்தாற்போல வைத்திருக்கிறீர்கள்' என்று கேட்டான். அதற்கு லோமசர் 'இந்த உடலோ அநித்தியம். இந்த அநித்தியமான உடலைக் காப்பதற்காக அதற்கென்று ஒரு வீடு கட்டிக் கொள்வானேன்? இந்த உடலை வெப்பத்திலிருந்தும், மழையிலிருந்தும் காப்பாற்ற இந்தச் சின்னப்பாய் போதாதா?' என்று கேட்டார் இந்தப்பதிலைக்கேட்டு இந்திரன்ஆச்சரியப்பட்டான்.

'சிரஞ்சீவியாகிய தாங்களா தங்கள் உடலை அநித்தியம் என்கிறீர்கள்?' என்றான். 'சிரஞ்சீவியாக இருந்தாலும் என் உடலும்ஒரு நாள் போக வேண்டியது தான். என் உடலிலுள்ள அத்தனை ரோமங்களும் உதிர்ந்ததும் இந்த உடல் அழிந்து விடும். இதோ பார், என் மார்புப்பாகத்தை ஒரு காசளவுரோமம் உதிர்ந்து விட்டது. அத்தனைக்கும் என் ரோமங்கள் உதிர்வதற்கு வெகுகாலம் ஆகிறது என்று நினைக்க வேண்டாம். ஒவ்வொரு பிரம்மா மறையும் போதும் என் உடலிலிருந்து ஓர் உரோமம் கீழே உதிர்கிறது. உனக்குத்தான் பிரம்மாவின் ஆயுட்காலம் எவ்வளவு சிறியது என்பது தெரியுமே! பதினாறு இந்திரர்களின் ஆயுட்காலம் பிரம்மாவுக்கு ஒருநாள். அப்படி 365 நாள் ஆனால் பிரம்மாவுக்கு ஒரு வருஷம், அப்படி நூறு வருஷங்கள் ஆனால் ஒரு பிரம்மாவின் ஆயுள், அவ்வளவு தானே! இந்த அற்பகாலத்துக்காகவா என்னைச் சிரமப்பட்டு வீடு கட்டிக் கொள்ளச் சொல்கிறாய்' என்று கேட்டார்.

மகரிஷி லோமசரின் ஆயுட்காலத்தோடு ஒப்பிடும்போது தன் ஆயுட்காலம் எவ்வளவு சிறியது என்பதை இந்திரன். எண்ணிப் பார்த்தான். உடனே அந்தப் பெரிய மாளிகையின் வேலையை நிறுத்தும்படி கட்டளையிட்டான்.

நன்றி
தெய்வீகக் கதைகள்

# தவறவிட்ட துவிச்சக்கர வண்டிகளை பெறக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)
தென்மராட்சிப் பகுதியில் மக்களால் கைவிடப்பட்ட 80 துவிச்சக்கர வண்டிகள் பாதுகாப்புப் படையினரால் மீட்கப்பட்டு52 வது படைப்பிரிவு அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளதாகவும்,

இவற்றின் உரிமையாளர்கள் தங்களிடம் உள்ள பற்றுச்சீட்டினையோ அல்லது இலக்கத்தையோ சமர்ப்பித்து துவிச்சக்கர வண்டிகளை வரணியில் உள்ள 52 வது படைப்பிரிவு அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# வேலணைப்பிரதேசத்தில் விரைவில் மீன் சந்தைகள்
## பிரதேச சபை ஏற்பாடு

(ஊர்காவற்றுறை)
வடக்குபுனர்வாழ்வு புனரமைப்பு அதிகார சபையின் உதவியுடன் வேலணைப் பிரதேச சபையினால் வேலணை துறையூர் அம்பிகை நகரில் மீன் சந்தை ஒன்று அமைக்கப்படவுள்ளது:

ஒரு லட்சம் ரூபா செலவில் இம் மீன் சந்தை அமைக்கப்படவுள்ளதாக வேலணைப் பிரதேச சபைத் தலைவர் ந. கருணாகரகுருமூர்த்தி தெரிவித்தார்.

மேலும் வேலணை வங்களாவடிச் சந்திப் பகுதியிலும்ஒரு மீன் சந்தை அமைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அதனை அமைப்பதற்கு தேவையான நிதி தொடர்பான கணிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (உ-25)

## திடீர் சோதனை

(யாழ்ப்பாணம்)
நேற்றுக் காலை 11 மணி முதல் யாழ். நகர பேருந்து நிலையப் பகுதியில் படையினர் திடீர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

வீதியால் சென்றவர்கள் மறிக்கப்பட்டு அடையாள அட்டைகள் பரிசோதிக்கப்பட்டதைக் காணமுடிந்தது. (உ-104)

# கோப்பாய் வைத்தியசாலையில் ஆளணியினர்க்குத் தட்டுப்பாடாம்

(ஆவரங்கால்)
கோப்பாய் அரசினர் வைத்தியசாலையில் ஆளணியினர்க்குப் பெருத்த தட்டுப்பாடு நிலவுவதாக கூறப்படுகிறது.

கடந்தகால இடப்பெயர்வுகளின்பின் மேற்படி வைத்தியசாலையினை நாடிச் சிகிச்சைபெறச் செல்வோர் தொகை என்றுமில்லாத அளவுக்கு உயர்ந்து காணப்படுகிறது. இருப்பினும் அங்கு கடமைபுரியும் வைத்தியர், தாதியர் மற்றும் ஊழியர் தொகை அதிகரிக்கவில்லை.

மூன்று வைத்தியர்கள் சேவையாற்ற தேவையுள்ள இடத்தில் ஒரே ஒரு வைத்தியர் மாத்திரமே சேவையாற்றும் நிலை காணப்படுகிறது.

இது இவ்வாறிருக்க குடும்ப சுகாதார ஊழியர் ஒருவர் மாத்திரமே கடமைபுரிவதால் அவருடைய விடுமுறை தினங்களில் பிரவசத் தாய்மார் பெரும் சிக்கல்களை எதிர்நோக்குவதாசவும் கூறப்படுகிறது (உ-57)

## நிவாரண விநியோகம்

(மானிப்பாய்)
மானிப்பாய் ப.நோ.கூ. சங்கக்கிளைகள் மூலம் இடம் பெயர்ந்த மக்களுக்கான நிவாரணம் (87ஏ,பி) புள்ளிகளுக்கு தற்போது வழங்கப்பட்டு வருகின்றது.(உ-120)

## பாராட்டு

(கொழும்பு)
கொள்ளுப்பிட்டியில் இடம் பெறவுள்ள இலக்கிய நண்பர்கள் சந்திப்பின்போது, மணிவிழா நாயகன் செங்கை ஆழியானுக்கு பாராட்டு இடம் பெறவிருக்கிறது. (து)

## இட மாற்றம்

(மானிப்பாய்)
யாழ். மாநகர சபையில் கணக்காளராக பணி புரிந்த எஸ். சண்முகரத்தினம் கடந்த ஜனவரி முதல் யாழ். செயலக கணக்கு கிளைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (உ-120)

## உதை பந்தாட்டம்

(இணுவில்)
வலிகாமம் தெற்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டித் தொடரில்,

இன்று பி. ப. 3 மணிக்கு, மல்லாகம் ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் றோயல் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து அறிஞர் ஐயன்னா விளையாட்டுக்கழகமும்,

பி. ப. 4 மணிக்கு, கண்ணகி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து இணுவில் லம்போதரா விளையாட்டுக் கழகமும்.

பி.ப 5.00 மணிக்கு ஸ்ரீ முருகன்ஐக்கியவிளையாட்டுக் கழகத்தை எதிர்த்து குப்பிளான்விக்கினேஸ்வரா விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன. (உ-49)

## சுசந்திகா வெற்றிவாகை

(கொழும்பு)
ஜேர்மனியின் டோச்மன் நகரில் கடந்த ஞாயிறன்று நடைபெற்ற சர்வதேச உள்ளக தடகள போட்டியில் மகளிருக்கான 60 மீற்றர் ஓட்டப் பந்தயத்தில் இலங்கையின் குறுந் தூர ஓட்டராணி சுசந்திகா ஜெயசிங்க முதல் இடத்தைப் பெற்றுள்ளார். (உ-9)

## பொதுச்சந்தை அமைப்பு

பிரமாண அடிப்படையிலான இரண்டு இலட்ச ரூபா மூலதன நிதியில் இருந்து ஊர்காவற்றுறை பிரதேச சபையினால் நாரந்தனையில் பொதுச்சந்தை ஒன்று அமைக்கப்படவுள்ளது. [உ-75]

# பாலர் பாடசாலைகள் மதிப்பிடும் பணி ஆரம்பம்
## அபிவிருத்தி கருதியாம்

(மந்திகை)
வடமராட்சி கல்வி வலயத்திற்கு உட்பட்ட பகுதிகளிலுள்ள பாலர் பாடசாலைகளின் இவ் வருடத்திற்கான மதிப்பீட்டுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வடமராட்சி வலய ஆரம்ப பிள்ளைப் பருவ அபிவிருத்தி உதவிக் கல்விப் பணிப்பாளர் துரைசத்தியசீலன் தெரிவித்துள்ளார்.

வடமராட்சி பிரதேசத்தில் அமைந்துள்ள பாலர் பாடசாலைகள் அங்கு பயில்கின்ற மாணவர்களுடைய விபரங்கள் கட்டடவசதி, தளபாடங்கள், ஆசிரியர் விபரங்கள் மதிப்பிடப்பட்டு வருகின்றன

இவ்வாறான விபரங்கள் சேகரிக்கப்படுவதன் மூலம் அவற்றினை அபிவிருத்திசெய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

உரியவர்கள் வடமராட்சி கல்வி வலயத்துடன் தொடர்பு கொண்டுவிபரத்தினை சமர்ப்பிக்குமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (உ-23)

# மது போதையில்சென்றாராம் மருத்துவ அறிக்கை சமர்ப்பிக்க மன்றுஉத்தரவு

(யாழ்ப்பாணம்)
மது போதையில் சென்று நீதிமன்றினை அவமதிக்கும் வகையில் நடந்து கொண்ட நபரை யாழ். போதனாவைத்தியசாலையில் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு யாழ் மாவட்ட நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

திருட்டுக் குற்றம் ஒன்றிற்காக நீதிமன்றின் உத்தரவிற்கிணங்க கிராம சேவையாளரால் மன்றில் ஆஜர் செய்யப்பட்ட குருநகரைச் சேர்ந்த அன்ரனி அரசு (வயது 34) என்பவர் தொடர்பாகவே மேற்படி உத்தரவை பொலிஸாரிடம் நீதிவான் விடுத்துள்ளார். (உ-104)

# குருநகர் மீன்வாடி நேற்று முதல்இயங்குகிறது

(ஈச்சமோட்டை)
குருநகர் மீன்வாடி நீண்ட நாள் இடைவெளியின் பின் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது.

கடந்தகால, இடம்பெயர்வுகளால் செயலிழந்து காணப்பட்ட இம் மீன்வாடி இப் பகுதியில் கணிசமான மக்கள் மீளக் குடியமர்ந்ததைத் தொடர்ந்து நேற்று முதல் இயங்க ஆரம்பித்துள்ளது.

குருநகர் ஐந்துமாடிக்கு எதிரே உள்ள இவ் வாடியின் இயக்கத்தினால் மீனவர்களின் சந்தைப்படுத்தும் வாய்ப்பு அதிகரித்துள்ளதோடு மக்களுக்கும் பெரும் நன்மை ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-59)

# எழுவைதீவில்பயனுள்ள மருத்துவ முகாம்

[ஊர்காவற்றுறை]
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீட இறுதி யாண்டு மாணவர்களால் கடந்த ஞாயிற்றுக்கிழமை எழுவைதீவு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவ முகாம் நடத்தப்பட்டது.

தற்பொழுது ஏற்படக் கூடிய தொற்று நோய்கள், அதனைத் தடுக்க எடுக்கக் கூடிய வழிமுறைகள் தொடர்பாகவும் இம் மருத்துவ முகாமில் ஆலோசனைகள் வழங்கப்பட்டன:

150 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டு மருத்துவ ஆலோசனைகளினைப் பெற்றுப் பயனடைந்தனர்.

இத் தீவில் வைத்திய வசதிகள் மிக குறைவாக உள்ள அதே வேளை, ஊர்காவற்றுறை பிரதேச சபை உப அலுவலகத்தில் சித்த ஆயுர்வேத வைத்திய நிலையம் ஒன்று மட்டும் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. [உ-75]

# சிறுவர் உரிமைகள் தொடர்பான கருத்தரங்கு

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் ரிவில் உள்ள கிராம சேவகர் பிரிவுகளில் இயங்கும் கிராமிய சிறுவர்அபிவிருத்திக் குழுக்களினைச் சேர்ந்த பிரதிநிதிகளுக்கு சிறுவர் உரிமைகள் தொடர்பான கருத்தரங்குகள் இடம்பெற்று வருகின்றன.

அந்த வகையில் எதிர்வரும் 16ம் திகதி மு. ப 10மணிக்கு புளியங்கூடல் நெசவு மண்டபத்தில ஜே-55, 57, 58, 59, 60 கிராமசேவகர் பிரிவுகளில் உள்ள சிறுவர் அபிவிருத்திக் குழுக்களின் பிரதிநிதிகளுக்கான சிறுவர் உரிமைகள் தொடர்பான கருத்தரங்கு இடம் பெறவுள்ளது.

சிறுவர் உரிமைகள்தொடர்பான கருத்தரங்கு மாவட்ட மட்ட பயிற்சியாளர்களினால் மேற்கொள்ளப்படவுளது. (உ-75)

# போக்குவரத்து துறையினர் வேலை நிறுத்தம்

(காட்மண்டு)

நேபாளத்தின் தலைநகர் காட்மண்டுவில் வீதிப் போக்குவரத்துத் துறையினர் அண்மையில் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

இருபது வருடப் பழமை வாய்ந்த வாகனங்கள் வீதியில் ஓடுவது தொடர்பாக அரசிற்கும் தனியார் போக்குவரத்துத் துறையினருக்கும் இடையே ஏற்பட்ட தகராறே இவ் வேலை நிறுத்தத்திற்கு காரணம்.

வேலை நிறுத்தம் காரணமாக பேருந்துகளோ தனியார் வாகனங்களோ போக்குவரத்தில் ஈடுபடாததனால் வீதிகள் வெறிச் சோடிக் காணப்பட்டது. (செ-து)

# பிரிட்டிஷ் பிரஜை இஸ்ரேலில் கைது

## தாக்குதல் நடத்தசென்றதாம்

(ஜெருசலேம்)

இஸ்ரேலில் தாக்குதல் நடத்துவதற்கென அனுப்பப் பட்ட பிரிட்டிஷ் பிரஜை ஒருவரை இஸ்ரேலிய பாதுகாப்பு படையினர் கைது செய்துள்ளனர்.

இவரை லெபனானிய ஹிஸ்புல்லாக்களே அனுப்பி வைத்திருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

இச் சம்பவத்தினை பிரிட்டிஷ் வெளிநாட்டமைச்சு உறுதி செய்துள்ளதுடன், தனது கண்டனத்தினையும் வெளியிட்டுள்ளது. (உ-9)

# உலக காதலர் தினத்திற்கு சிவசேனா பலத்த எதிர்ப்பு

(புதுடில்லி)

நாளை 14ஆம் திகதி உலகப் முழுவதும் கொண்டாடப் படும் காதலர் தினத்தை, இந்தியாவில் கொண்டாடுவதை இந்திய சிவசேனாக் கட்சி வன்மையாக எதிர்க்கின்றது.

இந்தியாவின் பல நகரங்களிலும் விறுவிறுப்பாக விற்பனையாகிக் கொண்டிருந்த காதலர் தின வாழ்த்துமடல்களை வீதிகளில் போட்டு தீ மூட்டினர்..

அத்துடன் நாளை 14ம் திகதி அன்று எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாகவும் சிவசேனாக் கட்சி கூறியுள்ளது. (செ-து)

# ராமதாஸ் கட்சித்தாவல் காங்கிரஸ் கடும் சீற்றம்

(சென்னை)

தமிழகத்திலே வருகின்ற ஏப்ரல் அல்லது மே மாதத்தில் நடைபெற இருக்கின்ற சட்ட மன்றத் தேர்தலை அடுத்து, தமிழக அரசியல் சூடுபிடிக்கத் தொடங்கி உள்ளதாகத்தெரியவருகிறது.

இதற்கான ஏற்பாடுகளில் இந்திய தேர்தல் கமிஷன் மும்முரமாக ஈடுபட்டுவரும் அதே வேளை, அரசியல் கட்சிகள் புதிய கூட்டணிகள் அமைப்பதில் ஈடுபட்டு வருகின்றன.

இந்த நிலையில் மத்திய தேசிய ஜனநாயகக்கூட்டணியில் அங்கம் வகித்திருந்த பாட்டாளி மக்கள் கட்சி அக்கூட்டணியில் இருந்து விலகி அ.இ.அ.தி.மு. காவுடன் கூட்டுச் சேர்ந்துள்ளது

இதனை அடுத்து தமிழகத்தில் புதிய அரசியல் சூழ்நிலை உருவாகிவருகிறது. கூட்டணி கணிப்புகளும் கணக்குகளும் தலை கீழாக மாறி உள்ளன

புதுவை மாநிலத்தில் அ.தி.மு.க. கூட்டணி வெற்றி பெற்றால் முதலமைச்சர் பதவியை பா.ம.க. விற்கு வழங்குவதாக ஜெயலலிதா வாக்குறுதி அளித்தமையும் புலிகளின் கடும் ஆதரவாளரான ராமதாஸ் அ.தி.மு. காவுடன் கூட்டு சேர்ந்ததும் காங்கிரஸுக்கு கடும் சீற்றத்தைஏற்படுத்தியுள்ளது. (உ-9)

# ஜம்மு காஷ்மீர் யுத்த நிறுத்த அறிவிப்பு அர்த்தமற்றதொன்று

(ஸ்ரீநகர்)

ஜம்மு - காஷ்மீரில் போர் நிறுத்தத்தை அரசு அறிவித்திருப்பது அர்த்தமற்றது என ஜம்மு காஷ்மீர் முதல்வர் பாரூக் அப்துல்லா தெரிவித்துள்ளார்

ஜம்முவில் நடைபெற்ற அனைத்துக்கட்சிகூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு இவர் மேலும் பேசுகையில் மத்திய அரசு நமது மாநிலத்தில் போர் நிறுத்தத்தை அறிவித்து பாதுகாப்புப்படையினரின் கைகளைகட்டிப்போட்டிருக்கிறது. அரசின் அறிவிப்பால்எவ்வித பயனும்இல்லை. தீவிரவாதிகளின் வன்முறை குறையவே இல்லை ஆகவே போர்நிறுத்தம் அவசியமற்றது இதுபற்றி எனது கவலையை பிரதமரிடம் தெரிவிக்கின்றேன் என தெரிவித்துள்ளார். (உ-9)

# இஸ்ரேல்-பலஸ்தீன பேச்சுவார்த்தைகளில் ஷரோனும் பங்கெடுப்பு

(கெய்ரோ)

பலஸ்தீனர்களுடனான பேச்சுவார்த்தைகளில் அண்மைக்காலங்களில் ஏற்பட்டு வரும் முன்னேற்றங்களை மேலும் அதிகரிக்கும்நடவடிக்கையினை புதிய இஸ்ரேலிய பிரதமர் ஏரியல் ஷரோன்முன்னெடுத்து செல்ல வேண்டும் என அரபு உலகவெளிநாட்டு அமைச்சர்கள் கேட்டுள்ளனர்.

இது தொடர்பான ஷரோனின் நிலைப்பாட்டை வெளியிடுவதற்கு எதிர்வரும் மார்ச் மாத இறுதியில் நடைபெற உள்ள அரபு நாடுகளின் உச்சி மாநாடு வரை அரபு நாடுகள் அவருக்கு கால அவகாசம் கொடுக்கக்கூடும்என எகிப்திய வெளி நாட்டமைச்சர் அமீர் மௌஷ கூறி உள்ளார்.

இதேவேளை, இஸ்ரேலுக்கு எதிரான பகிஸ்கரிப்பு மீண்டும் தொடங்க வேண்டும் என்று சிரிய கூறி உள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-9)

# புதிய அதிபர் புஷ் நிர்வாகத்தில் படை நலன் பேணும் திட்டங்கள்

(வாஷிங்டன்)

2002 ஆம் ஆண்டில் அமெரிக்கத் துருப்புகளுக்கு சிறந்த ஊதியத்தையும் வீடுகளையும் அளிக்க இருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி புஷ் வாக்குறுதி அளித்துள்ளார்.

சம்பள அதிகரிப்புக்கென 100கோடி டொலரும் இராணுவவீடமைப்புக்கு350 கோடி டொலரும் மேலதிகமாக ஒதுக்கப்பட விருப்பதாக தெரிய வருகிறது.

அடுத்த 10ஆண்டுகளில் 4ஆயிரத்து 500 கோடி டொலர் இராணுவ பட்ஜட்டில் மேலதிகமாக செலவிட புஷ் உறுதி அளித்துள்ளார்.

புஷ் நிர்வாகத்தின் முதலாவது பாதுகாப்பு பட்ஜட் கிளின்டனின் நிர்வாகத்தைவிட அதிகமாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-9)

# ஹவாய்த்தீவில் படகுவிபத்து ஒன்பது பேர் உயிரிழப்பு

(ரோக்கியோ)

ஹவாய்த்தீவின் கடற்பிராந்தியத்தில் ஜப்பான் மாணவர்களின் படகுகள் அமெரிக்க நீர்மூழ்கியுடன் மோதியதில் ஒன்பதுபேர் உயிரிழந்தனர். இருபத்தாறுபேர் உயிருடன் மீட்கப்பட்டனர்.

ஜப்பானிய மாணவர்களும் ஆசிரியர்களும் மூன்று படகுகளில் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த சமயமே அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பலுடன் மோதியது.

மீட்கப்பட்டவர்களில் நால்வரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது. (செ-து)

# காஷ்மீர் விவகாரம் பாக். ஆசை நிறைவேறாது

(ஸ்ரீநகர்)

இந்தியாவிடம் இருந்து காஷ்மீரை பிரிக்க முடியாது. பாகிஸ்தான் காஷ்மீரை தனது நாடாக்க விரும்புகிறது.

ஆனால் அது ஒருபோதும் நடக்காது காஷ்மீர் இந்தியாவின் ஓர் அங்கமாகவே இருக்கும் என்று ஜம்மு காஷ்மீர் முதல்வர் பாரூக் அப்துல்லா சென்னையில் நடைபெற்ற ஒரு விழாவில் தலைமை வகித்துப் பேசுகையில் தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் கூறியதாவது, மாநில சுயாட்சிக் கொள்கையினை வலியுறுத்தும் அதேநேரம் இந்தியாவை பலவீனப்படுத்த எடுக்கும் முயற்சிகளை ஆதரிக்க மாட்டோம் எனவும் கூறினார். (உ-9)

# ஜாவாவில் எரிமலை வெடிப்பு பல்லாயிரம் பேர் பாதிப்பு

(ஜகார்த்தா)

இந்தோனேசியாவின் ஜாவாத்தீவில் எரிமலை வெடித்ததில் பலாயிரக் கணக்கானோர் பாதிப்பிற்குள்ளாகினர்

பாதிப்பிற்குள்ளாகியவர்கள் அவசர அவசரமாக அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டனர்

இத்தீவில் சுமார் இருபது இலட்சம் மக்கள் வசித்து வந்தார்கள்.

எரிமலை வெடித்ததினால் ஏற்பட்ட உயிர்ச்சேத விபரம்தெரியவரவில்லை. (செ-து

# எய்ட்ஸ் நோய்க்கு சிகிச்சை பலனளிக்காது

(வாஷிங்டன்)

எய்ட்ஸ் நோயைக் கட்டுப்படுத்த தற்போது முன்வைக்கப் பட்டுள்ள சிகிச்சை முறைகள் ஒருபோதும் வெற்றியளிக்காது.

இவ்வாறு அமெரிக்க ஒவ்வாமை மற்றும் தொற்று நோய்களுக்கான ஆய்வு அமைப்பு ஒன்று அறிவித்துள்ளது.

இந்நோயைக் கட்டுப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் சிகிச்சை முறைகள் பாரதூரமான பக்கவிளைவுகளை ஈட்டித்தரும் எனவும்.

எய்ட்ஸ் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கும் போது அவதானமாகச் செயற்பட வேண்டும் என்றும் அவ் அமைப்பு மேலும் தெரிவித்துள்ளது. (செ-8)

# பதவி விலக வேண்டும் இன்றேல்; கொல்லப்படுவீர்

## லஷ்கனர் ஈ-தைபா எச்சரிக்கை

(புதுடில்லி)

'ஜம்முகாஷ்மீர்ப் பகுதியில் உள்ள விசேட இராணுவ, பொலிஸ் அதிகாரிகள் உடனடியாக வேலையில் இருந்து விலக வேண்டும். இன்றேல் தற்கொலைத் தாக்குதலுக்கு உள்ளாக வேண்டிவரும்,

இவ்வாறு பாகிஸ்தானில் இயங்கும் தீவிரவாதக் குழுவான 'லஷ்கனர் ஈ தைபா' என்னும் தற்கொலைக் குழு எச்சரிக்கை விடுத்துள்ளது.

மேற்படி தற்கொலைக் குழு ஸ்ரீநகரில் உள்ளபிரதான பொலிஸ் நிலையத்தை தாக்கி, ஒன்பது இந்தியப் பொலிஸாரை கொன்ற பின்னரே இவ் எச்சரிக்கையை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ)

# இந்திய-பாக். ஹொக்கி போட்டி ஒத்திவைப்பு

இந்திய பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் துபாயில் நடைபெற விருந்த ஹொக்கிப் போட்டித் தொடர் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இத் தொடரில் பங்கு கொள்ளும் இந்திய அணிக்கு, அரசு ஒப்புதல் வழங்குதல் தொடர்பாக நிலவிவரும் நிச்சயமற்ற தன்மையே இதற்குக் காரணமாய் இருக்கலாம் என ஒரு சாரார் கருத்து தெரிவித்துள்ளனர்.

இதேசமயம், ஹொக்கி போட்டி நடைபெற விருந்த மைதானம் திருத்த வேலைகளுக்கு உட்படுத்தப்பட்டிருப்பதே ஒத்திவைப்புக்கு காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-6)

## செய்திப்பரல்

★ எதிர்க்கட்சியான ஈராக்கிய தேசிய காங்கிரஸ் அமெரிக்க கொள்கைகளில் முக்கியபங்கு வகிப்பதாக அமெரிக்கா கூறி உள்ளது.

★ இராணுவப் புரட்சிமூலமாக ஹெய்ட்டிலிருந்து வெளியேற்றப்பட்ட ஜின்பேர்ட்ராணட்அரிஸ்டைட் மீண்டும் ஜனாதிபதியாக தெரிவாகியுள்ளார்

★ இனப் பாகுபாட்டை ஒழிப்பது குறித்து உலக மாநாடொன்றை நடத்த நடவடிக்கை எடுக்குமாறு ஐ நா மனித உரிமை பிரதம அதிகாரி அமெரிக்காவைக் கேட்டுள்ளார்

★ ஹொங்ஹொங்கின்பிரதம அதிகாரியை கொலை செய்வதாக பயமுறுத்தி அனுப்பப்பட்ட பார்சலை பொலிஸார்பிரித்த போது கொங்கிரீட் கல் ஒன்றே அதனுள காணப் பட்டது. (உ-09)

# வீதிவிபத்தில் மூவர் பலி

(பீஜிப்)

சீனாவில் நடைபெற்ற வீதி விபத்தொன்றில் மூன்று பேர் கொல்லப்பட்டதுடன் நாற்பதுக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர்.

ஒரே தடவையில் பலவாகனங்கள் இவ்விபத்தில் சிக்கியதாகவும் நூற்றுக்கு மேற்பட்ட வாகனங்கள் வீதியில் தடைப்பட்டு நின்றதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது (செ-9)

## உலக தரிசனம்

# இராட்டினம் தடம்புரண்டு மூவர் பலி

[புதுடில்லி]

புதுடில்லி அருகே கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற கலைக் காட்சி விழாவின் போதுஇராட்சதஇராட்டினம் தடம் புரண்டதில் மூவர் கொல்லப்பட்டுள்ளனர்.

பதின்மூன்று பேர் காயங்களுக்கு உள்ளாகினர், அதில் ஆறுபேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது. (செ-06)

ஏதம் பெருஞ்செல்வம் தான்
றுவ்வான் தககார்க்கொன்று
ஈதல் இயல்பில்லாதான்

- குறள் -

வலம்புரி

## ஏறினால் இறங்காது!

மூகாமை செய்யப்பட்ட மிதக்கும் நாணய மாற்றுவீதத்தை தளர்த்தி சந்தை நிலைமைகளுக்கேற்ப நாணயப்பெறுமதியைத் தீர்மானிப்பதற்கு மத்திய வங்கி அனுமதித்ததனால் டொலரின் பெறுமதி திடீரென அதிகரித்தது. இதன் விளைவாக உள்நாட்டுவிற்பனையாளர்கள் தம்மிடமுள்ள பொருட்கள் சேவை மீது நியாயமற்ற முறையில் விலை அதிகரிப்பை ஏற்படுத்தினர்

இதனைத் தூண்டுவது போல் வர்த்தக வங்கிகளும் டொலருக்குச் செயற்கையான தட்டுப்பாட்டை ஏற்படுத்தின. எனினும் மத்திய வங்கியும், பொருளியல் நிபுணர்களும் மேற்கொண்டபதில் நடவடிக்கைகள் டொலரின் பெறுமதியை கணிசமான அளவிற்கு வீழ்ச்சியடையச் செய்துள்ளது. இவ்வீழ்ச்சி, இலங்கைப் பொருளாதாரம் குறித்தபொருளியலறிஞர்களின்எதிர்வுகூறல்களைக் கூட உடைத்து விட்டதென்றே கூறவேண்டும்.

டொலரின் பெறுமதியைக் குறைத்ததில இலங்கை மத்திய வங்கியும், அரசும் வெற்றிகண்டிருந்தாலும் டொலரின் பெறுமதி அதிகரிப்பால் ஏற்பட்ட பொருட்கள் சேவைகள்விலை உயர்வை அரசாங்கத்தால் கட்டுப்படுத்த முடியவில்லை.

பொதுவாக இலங்கையில் பொருட்களுக்கு ஏற்படுகின்ற திடீர் விலை ஏற்றங்கள் என்றுமே தற்காலிகமாக இருந்ததில்லை ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பொருட்களின் விலை அதிகரிப்புக்கள் நிரந்தரமாகவே மாற்றப்பட்டுள்ளது. இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம் அரசியல் வாதிகள் வர்த்தகப் பெரும் புள்ளிகளின் விசுவாசிகளாக இருப்பதும், விலைக்கட்டுப்பாட்டுத் திணைகளம் நீண்டகாலமாகவே இயக்கமற்ற ஒரு சடமாக இருப்பதுமேயாகும். அதே நேரம் சில செய்தி ஊடகங்கள் தமது சுயநலம் கருதி விலையேற்றத்தை ஆதரித்து நல்ல பிள்ளைகளுக்கு நடித்து வர்த்தக விளம்பரங்களை வலிந்து பெற்று வாழமுனைவதும் காரணம் என்பதை மறந்துவிடமுடியாது.

இந் நிலையில்பொருட்களின் விலை ஏறினால் மீண்டும் இறங்குவது என்பது இலங்கையின் சரித்திரத்தில் இல்லாததொன்றேயாகும்.

# இளமையைச் சிதைக்கும் மனச்சிதைவு நோயை

# இனங்கண்டு சிகிச்சை அளித்தால் குணமாகும்

### டாக்டர் ஜி. ராஜமோகன்

உளநோயினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களில் பெரும்பாலோர் ஸ்கீசோபெர்னியா (Schizophernia) எனும் மன நோயாளிகளே யாவர். கிரெப்சின் என்பவர் 1896 ஆம் ஆண்டு இந்நோய்க்கு 'டிமென்சியா பிரேகாக்ஸ்' என்று பெயரிட்டார். இது பூப்பெய்தும் பருவத்தில் ஆரம்பமாகி, இறுதியில் மிக்க சீர்கேடான நிலையை அடைகிறது என அவர் கருதினார். ஆனால் இந்நோய் பூப்பெய்தும்காலத்திற்கு முன்பும். அதற்குப் பின்பும் தோன்றக்கூடும் என்ற காரணத்தாலும், பல வகையான அறிகுறிகளைக் கொண்டுள்ளதாலும், இதனை புலூலர் எனபார் (1950) ஸ்கீசோபெர்னியா' என்றழைத்தார். இதற்கு மனச்சிதைவு. ஆளுமைச் சிதைவு எனப் பொருளாகும் இந்நோய் குணமாகப்பலவருடம் ஆவதாலும், மற்ற உளப்பிணியாளர்களை விட இந்நோயாளிகளின் இறப்பு விகிதம் குறைவாக இருப்பதாலும், மருத்துவ மனைகளில் உளநோயாளிகளாக உள்ளோரில் அதிகமானவர்கள் இவர்களே.

#### அறிகுறிகள்

உளச் செயலில் இயைபற்ற தன்மை, மனவெழுச்சியின்மை, எண்ணச் சீர்கேடு, சமூகத்தோடு ஒட்டி வாழும் தன்மை இல்லாமை, திரிபுணர்ச்சி, இல் பொருள் உணர்வு, சிறுபிள்ளைத் தனமான நடத்தை ஆகியவை இந்நோயின் அறிகுறிகளாகும்.

மனவெழுச்சியற்ற தன்மையின் காரணமாக இவர்களுக்கு காதல், இரக்கம், அன்பு, மென்மையான உணர்வுகள் இருப்பதில்லை, குடும்பத்தில் ஏற்படும் இன்ப-துன்ப நிகழ்ச்சிகள் இவர்களைப் பாதிப்பதில்லை. ஆர்வமின்மையால் யாதொரு தூண்டுதலுமின்றி வெறித்து நோக்கிய வண்ணம் இருப்பர். தனது ஆடை சுத்தம், அடிப்படை ஊக்கிகளுக்குத்தேவையானவற்றைக் கூட இவர்கள் கவனிப்பதில்லை. பிறரோடு பேசமால் பழகாமல் தனித்து வாழவே விரும்புவர்.

முரண்பாடான மனவெழுச்சிகளை வெளிக்காட்டும் இவர்கள் எவ்வித காரணமுமின்றிச் சிரிப்பதும், சினமுறுவதும், அலறிப் புடைப்பதும், பிறரை அடிப்பதும் வாடிக்கையான செயலாகும். பிறர் இவர்கள் மீது கொள்ளும் இரக்கத்தை இவர்களால் புரிந்து கொள்ள முடியாது. தனது குழந்தையைக் கொன்று விட்டதாய், தனது அன்பான குழந்தையைக் கொன்று விட்டதற்காக வருந்தும் அதேநேரம், தனக்குப் பிடிக்காத கணவனின் குழந்தை என்று கூறி மகிழ்வாள். இவ்வாறான இரட்டை நிலை மனவெழுச்சி வெளிப்பாட்டை இவர்களிடம் காணலாம்.

மருத்துவ விளக்கம்

#### எண்ணக் கோளாறுகள்

இந்த மன நோயாளிகள் பகுத்தறிவுக்கும், நடைமுறைக்கும் ஒவ்வாத எண்ணங்களைக் கொண்டிருப்பர். இறந்தவர்கள் பேசுவது போலவும், தன்னைப் பிறர் கொல்ல முயல்வதைப் போலவும், தனக்கு எல்லாவிதச் சக்திகளும் இருப்பது போலவும், கடவுளின் அவதாரம் என்றும் எண்ணி அவ்வாறே நடந்து கொள்வார்கள்.

#### இல்பொருள் உணர்வுகள்

இல்லாத வெளித் தூண்டுதல்களுக்கு இவர்கள் துலங்குவர். யாரோ பேசுவது போல கேட்டு, அதற்குப் பதிலாக ஏதாவது பேசுவார்கள். பிறர் வருவது போலவும், தொடுவது போலவும், ஒன்றும் எழுதாத தாளை வைத்துக் கொண்டு அதில் எழுதியிருப்பது போலவும் படிப்பார்கள்.

#### பேச்சுக் கோளாறுகள்

ஊமையைப் போல இவர்கள் பேசாமலும், சில வகையினர் வார்த்தைகளைத் தொடர்பின்றிக் கதம்பமாகவும் பேசுவது உண்டு தாம் இறந்து விட்டதாக எண்ணிப் பேசாமலும் அல்லது வேறு ஒருவர் ஆணையிடுவது போல் உணர்ந்து அதன் காரணமாகப் பேசாமலும் இருப்பர். சில வேளைகளில் இவர்கள் பேசுவது ஆன்மீகத் தொடர்புடையன போலத் தோன்றும், புதுச் சொற்றொடர்களையும் இவர்கள் பயன்படுத்துவார்கள். எழுத்து வினோதங்களும் இவர்கள் செய்வார்கள், புது எழுத்துக்களைப் புனைவார்கள.

சிந்தனை தெளிவின்றியும், சிந்தனை ஒட்டத் தடையுடனும், ஒரு எண்ணத்திலிருந்து மற்றொரு எண்ணத்திற்குத் தவுபவராகவுமஇருப்பார்கள். இவர்களது நுண்ணறிவு சராசரி அளவு இருந்தாலும், நோயின் தன்மை தீவிரமாக இருக்கும் போது நுண்ணறிவுத திறன் மழுங்கி விடுகிறது. நோயின் அறிகுறிகள் மறையத் தொடங்கிய பின்னர் இவர்கள் பழைய நிலைக்குத் திரும்புகின்றனர். குணமாகுந்தன்மை நுண்ணறிவைச் சார்ந்துள்ளது.

பொதுவாக இவர்களால், தான் யார்? தன் உறவினர் யார்? அவர்களின் பெயர்கள் போன்றவற்றைக் கூற முடியும். ஆனால் தனது உளச் சீர்கேட்டைப் பற்றி இவர்கள் அறிகிலார்.

#### நான்கு வகை

இந்நோயைப் பொதுவாக நான்கு வகையாகப் பிரிக்கலாம். சாதாரணவகை, ஹெபிபிரனிக் வகை, (குழந்தைத் தனமும் மடமையும் கொண்ட வகை), காட்டடோனிக் (உணர்ச்சியற்ற, புதுமையான வகைகளில் உடல் உறுப்புகளை வைத்துக் கொள்வது போன்ற அறிகுறிகளையுடைய வகை) பரனோயா (எண்ணக் கோளாறுகள் சந்தேகம் ஆகிய அறிகுறிகள் நிறைந்த வகை) என்பனவாகும்.

#### காரணங்கள்

உடலியல் காரணங்களும், சூழ்நிலைக் காரணங்களும் இநநோயின் தோற்றத்திறகு காரணங்களாகும். லண்டனிலுள்ள மிடில்சிக்ஸ் மருத்துவ மனையில் மேற்கொண்ட ஆய்வில் இந்நோய் குறையான ஜீனிலிருந்து தோன்றுவதாகக் கண்டுள்ளனர். டாக்டர் கூ குர்லிங் என்பவர் இதைப் பற்றிய ஆராய்ச்சியை மேற்கொண்டு விரைவில் ஒரு மருந்தைக் கண்டு பிடித்து விடலாம் என்று கூறினார்.

இந் நோய்க்கான ஜீன்களைக் கொண்ட ஒருவர் இந்நோயால் பாதிக்கப்படாமலே இருக்கலாம். நல்ல சூழ்நிலை, சமூக அமைப்பு, மனப்போராட்டங்களைச் சந்திக்கும் ஆற்றல் ஆகியவை அமைந்திருக்க வேண்டும்.

#### சிகிச்சை முறைகள்

ஒரு சிலரை வீட்டில் வைதது சிகிச்சை அளிக்க முடியும். இந்நோய்க்குப் பல வகையான சிகிச்சை முறைகள் உள்ளன. மின் தூண்டல் மூலமான அதிர்ச்சியை உண்டு பண்ணிச் சிகிச்சை அளிக்கலாம். மருந்துகள் மூலமும், தொழில் சார்ந்த சிகிச்சை மூலமும் தற்சமயம் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. சிலவகை நோயாளிகள் மருத்துவ மனையில் சேர்ந்து, ஒன்றிரண்டு ஆண்டுகளில் எவ்விதமான சிறப்பான சிகிச்சையுமின்றியும் குணமடைகின்றனர். நீண்டகால சிகிச்சையின் மூலம் இம் மனநோயாளிகளைக் கட்டுக்குள் வைக்க முடியும்.

★ ★ ★

# பாட்டாளி மக்கள் கட்சி அ.இ.அ.தி.மு.க. கூட்டு

# இக்கட்டான நிலையில் இந்திரா காங்கிரஸ்

இந்து பத்திரிகையில் மாலினி பார்த்தசாரதி எழுதிய கட்டுரையின் தமிழாக்கச் சுருக்கம்.

பாட்டாளி மக்கள் கட்சி அ. இ. அ. தி. மு.க வுடன் தேர்தல் கூட்டு வைத்துக் கொண்டுள்ளமை இந்திரா காங்கிரஸ்கட்சியின்மனச்சாட்சியை பெரிதும் சோதிப்பதாகவுள்ளது. எல். ரீ. ரீ. ஈ க்கு ஆதரவுகாட்டி வந்த, தி. மு. க வுடன் 1997 இல் இருந்து அது உறவுகளை துண்டித்தது.

இந்திரா காங்கிரசின் இந்த நிலைப்பாடானது, அன்று வரை மத சார்பின்மையை காத்து வந்த தி மு.க. வை பா ஜ.க. வுடன் கூட்டு வைக்கத்தூண்டியது இப் பொழுது பா.ம.கட்சியை தனது கூட்டணிக்குள் சேர்த்துக்கொண்டுள்ளதனால், அது குஜ்ரால் அரசுக்கு அளித்து வந்த ஆதரவை 1997ல்மீளப் பெற்றமைக்கான தகுந்த காரணத்தை காங்கிரஸ் மக்களுக்கு கூறக் கடமைப்பட்டுள்ளது. காங்கிரசின் அன்றைய தீர்மானம் பா.ஜ.க.ஆட்சிக்கு வர வழி வகுத்திருந்தது. இதனால் இன்றைய நிலையில், தமிழ் நாட்டின் தேர்தல் தொடர்பான அடுத்த கட்ட நடவடிக்கைக்கு போகமுன், காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி, டாக்டர் ராமதாஸ் ஈழம் என்ற நிலைப்பாட்டை கொண்டவர் என்பதை ஆமோதித்து மக்களுக்கு அறிவிக்க வேண்டும்.

1989 தொடக்கம் எல். ரீ. ரீ. ஈ யுடன் நெருங்கியவரான உறவு கொண்டிருந்த பா.ம.க. 1991 இல் ராஜீவின் கொலையின் போது வகித்திருந்த நிலைப்பாட்டை காங்கிரஸ் எடை போட வேண்டும். 1992 மே மாதத்தில் சட்டமன்றத்தில் ஜெயலலிதா ராமதாசுக்கு புலிகளுடன் நெருங்கிய உறவிருப்பதாக பேசினார். புலிகளுக்கு எதிரான அலை இந்தியா முழுவதும்வீசிய 1992 செப்டெம்பரில்பா. ம. க. பிரபாகரனினதும், தற்கொலை குண்டுதாரி தனுவினதும் உருவப்படங்களை சென்னையில் ஊர்வலமாக எடுத்துச் சென்றது ஈழத்தமிழருக்கு சுயநிர்ணய உரிமை வேண்டுமென்று பிரகடனம் செய்தார். இதன் உச்சக்கட்டத்தில் 92. 9. 24 இல் ஜெயலலிதா பா. ம. கட்சியை தடை செய்யுமாறு பிரதமர் நரசிம்மராவை கேட்டுக் கொண்டார். 96 இல் ஈழத் தமிழர் பாதுகாப்பு மகாநாட்டை ஒழுங்கு செய்து அதில் புலிகள் மீதான தடையை நீக்குவதற்கு மத்திய அரசை தூண்டும்படி முதலமைச்சர் கருணாநிதியை கோரியிருந்தார்.

தமதுதேர்தல்விஞ்ஞாபனத்தில் தமிழீழப் போராட்டம் மத்திய அரசினால் உத்தியோக பூர்வமாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்று பா.ம.க. பிரகடனம் செய்தது. கடந்த ஆண்டு யூலையில் ஈரோட்டில் நடத்தப்பட்ட தமிழ் நாடு விழிப்பு

(→ 2ஆம் பக்கம் பார்க்க

சாரங்கனின்
விஷேட விலைக்கழிவு
இன்று முதல் 07/03/2001
வரை உங்கள் ஓடர்களை
முன்கூட்டியே
பதிவு செய்யுங்கள்
சாரங்கன்
நகைமாடம்
45. கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
[கி-1478]

★ விடுதலைப்புலிகளை

# தடை செய்ய வேண்டாம்

# திருமலை அமைப்புகள் மகஜர்

(திருகோணமலை)

தமிழீழ விடுதலைப் புலிகள் விவகாரத்தில் பிரித்தானிய அரசு நிதானப் போக்கினை கடைப்பிடிக்க வேண்டுமென்று கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

இனப் பிரச்சினையை பேச்சுவார்த்தை மூலம் தீர்க்க முயற்சிகள் நடை பெற்றுக் கொண்டிருக்கும் வேளையில் திருகோண மலையில் உள்ள பல்வேறு நிறுவனங்கள் இக் கோரிக்கையை விடுத்துள்ளன.

சமூக சேவை நிறுவனங்கள் அரச சார்பற்றஅமைப்புக்கள் சட்டத்தரணிகள், மற்றும் மருத்துவ நிபுணர்கள். ஆகியோர் இணைந்து இலங்கைக்கான பிரித்தானிய தூதுவர் ஊடாக பிரிட்டிஷ் பிரதமர் ரொனிபிளேயருக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரிலேயே இக் கோரிக்கையை விடுத்துள்ளனர். (ந-4)

மங்கையர் மனங்களைக்
கொள்ளை கொள்ளும்
தங்க நகைகளைப்
பெற்றுக்கொள்ள
நியூ நகுலா
ஜுவல்லறி
74, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.
[கி-1477]

## அதிபர் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

கந்தரோடை ஸ்கந்த வரோதயக் கல்லூரியில் கல்வி கற்ற பல்கலைக் கழக மாணவர்களை நாளை புதன் கிழமைபிற்பகல்2.30மணிக்கு கல்லூரி மண்டபத்தில் ஒன்று கூடுமாறு கல்லூரியின்அதிபர் கே.சிவாஜி கேட்டுள்ளார். (ந)

## சவூதியில் எஜமானின்

# கொடுமை தாங்கமுடியாது மாடியால் குதித்தபெண்

சவூதிஅரேபியாவில் வீட்டு பணிப்பெண்ணாக தொழில் செய்த இலங்கைத் தமிழ்ப் பெண்ணொருவர் வீட்டு எஜமானரின் தொந்தரவு தாங்க முடியாமல் மாடியிலிருந்து குதித்ததனால்இடுப்புமுறிந்து கால்கள் செயலற்ற நிலையில் அங்கிருந்து திருப்பியனுப்பப் பட்டுள்ளார்.

பத்துநாட்களுக்குமுன்னரே இப் பெண்மணி கொழும்பிலிருந்துசவூதி அரேபியா சென்றிருந்தார்என்பது இங்கு குறிப் பிடத்தக்கது.

இதேவேளை ஜோர்தானில் வீட்டுபப்ணிப் பெண்ணாக தொழில் செய்த மற்றொரு இலங்கைத் தமிழ்ப் பெண் மாடியிலிருந்து வீழ்ந்து கால் முறிந்தநிலையில் அங்கிருந்து திருப்பியனுப்பபப்பட்டுள்ளார்

இப்பெண்மணி தனது எஜமானர்நல்லவர்எனவும்,குறைவின்றி சம்பளம் வழங்கினார் எனவும், கண்ணாடி துடைத்துக் கொண்டிருந்த போதே தவறுதலாக மாடியிலிருந்து விழுந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

இது இவ்வாறிருக்ககடந்த 6ம் திகதி குவைத்திலிருந்து நாடு திரும்பிய பெண்ணொருவர் உளவியல் ரீதியாக பாதிப்படைந்திருந்தமையும் இங்கு குடுப்பிடத்தக்கதாகும். (இ)

பத்து--

கூடாது என்று கோருவதற்கே பிரித்தானிய தூதுவரை இன்று காலை அவசரமாக சந்திக்கவுள்ளனர்.

இச்சந்திற்பிற்கான அனுமதியை பிரித்தானிய தூதரகம் நேற்றிரவு வழங்கியது:

இச் சந்திப்பு தொடர்பாக கலாநிதி குமரகுருபரன் தெரிவிக்கையில், நாம் இதுவரை விடுதலைப்புலிகளின் யுத்த நிறுத்தத்தை ஏற்று அரசு புலிகளுடன் பேசுவதற்கு வற்புறுத்த வேண்டுமென்று பிரித்தானியாவை கோரியிருந்தோம். ஆனால் இன்று அவற்றை விடுத்துப் புலிகளைத் தடை செய்ய வேண்டாம் என்று மாத்திரமே வற்புறுத்திக் கூறவுள்ளோம் என தெரிவித்தார். (வ)

# ஜனாதிபதிதேர்தல் சட்டபூர்வமானது

## உயர்நீதிமன்றம்தீர்ப்பு

(கொழும்பு)

கடந்த ஆண்டுநடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் சட்டபூர்வமானதென்றுகொழும்பு உயர்நீதி மன்றம்நேற்றுதீர்ப்பு வழங்கியுள்ளது.

சந்திரிகாகுமாரதுங்க ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டதை எதிர்த்து ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் கட்சியின் பொதுச் செயலாளர் காமினி அத்துக்கொறள தாக்கல் செய்திருந்த மனு உயர்நீதி மன்றம் நிராகரித்து தீர்ப்பு வழங்கியுள்ளது.

நேற்றுக் காலை உயர்நீதி மன்றப் பிரதமநீதியரசர் சரத் என்.சில்வா,மற்றும் நீதியரசர்களான எஸ், டபிள்யு வி வட்டுக்கொட பிற்றிய பிறேம்த பெரேரா வீ'பி எஸ் குணசேகர இஸ்றாமி பண்டாரநாயக்க ஆகியோர் முன்னிலையில் மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இம்மனுதொடர்பாக தகுந்த சாட்சிகள் முன்வைக்கப்படாததால் மனுத் தொடர்பான விசாரணையை முடித்துக் கொள்வதாக பிரதம நீதிபரசர் வழங்கிய தீர்ப்பில் குறிப் பிட்டார்: (ந-4)

## அரசு - புலிகள் ....

துக் காட்டின. சமாதான முயற்சியில் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பிரிட்டன் உட்பட ஐரோப்பிய நாடுகள் தான் மிக ஆதரவை வழங்க வேண்டும்.

**நான் தலைமறைவாக வாழ வேண்டும்**

**சுந்திரமாக பேச்சு நடத்த முடியாது**

விடுதலைப் புலிகள் இயக்கத்தை பிரிட்டன் தடை செய்தால் இயக்கம் பலவீனமடைவதுடன் நான் பிரித்தானியா வில் இருந்து கொண்டு சுதந்திரமாகப் பேச முடியாது இதனால் நான் தலைமறைவாக வாழ வேண்டி ஏற்படும். இந்நிலையில் நோர்வேத் தூதுவரும் நானும்பிரித்தானியாவில் சந்தித்துபேசினால்அதுசதி முயற்சியாக இருக்கும் என்று பிரித்தானிய அரசு அப்பேச்சு வார்த்தையைத் தடை செய்ய வேண்டி ஏற்படும். இதனால் பேச்சு எந்தவிதமான நன்மையையும் தரப்போவதில்லை.

விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தமுன் வந்துள்ள இலங்கை அரசாங்கம் பிரித்தானிய அரசு புலிகள் இயக்கத்தைதடை செய்ய வேண்டுமென்று தொடர்ந்தும் கோரிவருகிறது.

பேச்சுவார்த்தை நடத்த முன்வந்துள்ள அரசு புலிகள் மீதான தடையை நீக்குமாறு கோரிவருவதை விடுத்து எம்மைத் தடைசெய்யுமாறு கோரிவருகிறது:

**தடைசெய்யப்பட்டால் ஏற்படும் விளைவுகள் பற்றி தூதுவரிடர்கூறியுள்ளேன்**

விடுதலைப்புலிகள் இயக்கத்தைத் தடை செய்வதினால் ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகளை நான் ஏற்கனவே நோர்வேத் தூதுவர் எரிக்சோல் ஹெய்மிடம் கூறியுள்ளேன். இதற்குத் தூதுவர் வெளிநாடு ஒன்றின்கொள்கை மீது தலையிட முடியாது என்றும் ஆனால் தடைசெய்வதினால் ஏற்படக் கூடியா விளைவுகளை பிரித்தனியாவுக்குத் தான் சுட்டிக்காட்டப் போவதாக என்னிடம் தெரிவித்துள்ளார்.

**பிரிட்டனின் புதிய சட்டத்தில் சிக்குவது புலிகளின்துரதிஷ்டமே**

தமிழீழ விடுதலைப் புலிகள் ஒரு விடுதலை இயக்கம் என்ற நிலைஉலக நாடுகளில் உள்ளது ஆகும். பிரிட்டனின் புதிய சட்டம் மிகவும் பாரதூர மானதாக அமைந்துள்ளது. இச் சட்டத்தின் பிடிக்குள் நாம் சிக்க வேண்டியிருப்பது மிகவும் துரதிஷ்டவசமானதாகும்.

சுயநிர்ணய உரிமையை இலட்சியமாகக் கொண்ட ஆயுதம் தாங்கியஇயக்கத்தை பிரித்தானியாவின் புதிய சட்டம் அங்கீகரிக்க மாட்டாது: இதனால்எமக்கு பாதகமான நிலை ஏற்படலாம். இதுசமாதான முயற்சியில் பெரும் பாதிப்பை ஏற் டுத்தும்என்று அன்ரன்பாலசிங்கம் கூறியுள்ளார். (வ)

புலிகளை---

ருமான பி.சந்திர சேகரன் இலங்கையிலுள்ள பிரித்தானிய தூதருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

புலிகளுக்கெதிரான இந்தியாவின் எதிர்க் கட்சிகள் கூட பேச்சுவார்த்தையை ஆதரிக்கும் போது புலிகளோடு பேச்சு வார்த்தை நடத்துவோம் என்றுகூறும் இலங்கையரசு பிரித்தானியா புலிகளைத் தடை செய்வதை ஆதரிப்பது வினோதமானதெனவும் பி. சந்திரசேகரன் அக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

எனவே புலிகளைத் தடை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை பிரித்தானியா முற்றாக நிராகரிக்க வேண்டுமென்றும் இலங்கை அரசியலில் அக்கறையுள்ள அனைத்து நாடுகளும் பேச்சு வார்த்தை மூலமான தீர்வில் ஆர்வம் காட்டி வருவதனையும் அக்கடிதத்தில் சந்திரசேகரன் சுட்டிக்காட்டியுள்ளார். (ந-5)

வீடுகளின் --

உறுதியின் பிரதி, கட்டட வரைபடம்,விலை மதிப்பீட்டு அறிக்கை, வரி மதிப்பீட்டு இலக்கம் போன்ற விபரங்களை கடிதம் மூலம்,சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்' காங்கேசன்துறை பொலிஸ் நிலையம், எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப் பட்டுள்ளது. (இ)

புலிகளைத் தடை ஆதாரமாகஉள்ளது.

இன்நிலையில் விடுதலைப் புலிகள்அமைப்பை உலக சமாதானத்தைநிலைநாட்டும் நல்லெண்ண அடிப்படையில் பிரித்தானிய அரசாங்கம் தடைசெய்தே ஆகவேண்டும்:

இதனை பிரித்தானிய அரசாங்கம் உணர்ந்துபுலிகள் அமைப்பைத் தடைசெய்யாது விட்டால் வேறுமாற்றுவழி இன்றி பிரித்தானிய அரசு மீதுநாம் சட்டநடவடிக்கை எடுக்கவேண்டி இருக்கும் என்றும் அவர்மேலும் தெரிவித்துள்ளார். (இ)

அநுருத்த..

வன்மையாகக் கண்டித்துள்ளது இதுதொடர்பாக ஆலய நிர்வாகம் கருத்துத் தெரிவிக்கையில் திருக்கேதீஸ்வர ஆலயத்தில் தற்போது படையினர் தங்கியிருப்பதாகவும் ஆலய தீர்த்தக் கேணியை அவர்கள் பயன்படுத்தி வருவதாகவும் கூறியுள்ளனர்.

இந்நிலையில் ஆலய சுற்றாடலில் இராணுவத்தினர் ஆலயத்தில் இல்லை என்று அமைச்சர் கூறியிருப்பது கண்டிக்கத்தக்கதாகும் என்றுகூறியுள்ளனர். இதேவேளைசிவராத்திரியைமுன்னிட்டுஆலய சுற்றாடலை துப்பரவு செய்வதற்கு இராணுவத்தினரிடம் அனுமதி கோரியிருந்த போதும் இன்று வரை எந்த விதமான பதிலும் அவர்களிடம் இருந்து கிடைக்கவில்லையெனவும் தெரிவித்துள்ளனர்.

விற்பனையாகின்றது
1) தமிழ் மூலம் கொம்பியூட்டர்
2) கொம்பியூட்டர் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான -NCCA-PART-I
3) OMOS-SELECTION- புத்தகங்கள்
விற்பனையாகின்றது
மக்மிலன் புத்தகசாலை
இல. 3, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(கி-1480)

ஸ்ரீ செல்வா
(யாழ்ப்பாணம்)
கார்த்திக், பிரபுதேவா
நடித்த
உள்ளம் கொள்ளை
போகுதே
10-30, மட்டும் (ப. நே)
லிவிங்ஸ்டன், கரன்,
விவேக், வடிவேல்
நடித்த
எங்களுக்கும்
காலம் வரும்
2-30 மட்டும் (ப.நே)
(புதிய வெளியீடுகள்)
(கி 1482)

கண்ணீர் அஞ்சலி
வடமராட்சி கிளையைச் சேர்ந்த
துவாரகா பேக்கரி உரிமையாளர்
திரு. க. சிவகுருநாதன்
அவர்களின் தந்தையார்
மயில்வாகனம் கணபதிப்பிள்ளை [பேக்கரி தம்பு] அவர்களின் மரணச் செய்தி கேட்டு துயரடைகின்றோம். அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.
யாழ். மாவட்ட
பேக்கரி உரிமையாளர் சங்கம்.
317, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
[கி-1484]

இப் பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தினரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 13ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.